



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்

# சிறுவர் சிறுகதைகள்



பா. இரமணாகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் விபரம்

| | | |
|---|---|---|
| 1. தலைப்பு | : | கல் சிறுவர் சிறுகதைகள் |
| 2. நூலாசிரியர் | : | பா. இரமணாகரன் |
| 3. முதற்பதிப்பு | : | 2017 |
| 4. உரிமை | : | ஆசிரியருக்கே |
| 5. பக்கங்கள் | : | 74 |
| 6. பிரதிகள் | : | 200 |
| 7. அட்டைப்படம் | : | பா. இரமணாகரன் |
| 8. அச்சிட்டோர் | : | அன்றா பிறிண்டேர்ஸ்,<br>யாழ்ப்பாணம். |
| 9. கருத்தோவியம் | : | பா. இரமணாகரன் |
| 10 விலை | : | 500.00 |
| 11. I.S.B.N | : | 978 - 955 - 43539 -3-0 |
| 12. எழுத்தளவு | : | 12 |
| 13. நூலின் அளவு | : | A5 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே....

01. ஆசியுரைகள்........................................................ v - ix
02. கல் ........................................................ 03
03. நான் பிரயோசனமானவன் ........................................ 15
04. கடவுள் ஏன் கல்லானார் ........................................ 39
05. விளையாட்டுப்போட்டி ........................................ 57

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



தொழிலுக்கு உயிர் தந்து
படைப்பிற்கு வழிகாட்டி
இன்று மீளாத்துயில் கொள்ளும்
மாவை வரோதயன் என்னும்
புனை நாமம் கொண்ட எழுத்தாளர்.
என்றும் உயிர் வாழும் வேப்பமரம்
சிறுகதைத் தொகுதியைப் படைத்த
சிவகடாட்சம்பிள்ளை சத்தியகுமாரனே!
உமக்கு இந்நூல் சமர்ப்பணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசியுரை

ஆசிரியர் திரு.பா.இரமணாகரன் அவர்கள் வடலியடைப்பைச் சேர்ந்தவர் அவரை நீண்டகாலமாக நான் நன்கு அறிவேன். அமைதி, அடக்கம், இறைபக்தி இவை மூன்றும் இவரது அணிகலன்கள். இவை ஒன்றிணைந்த வடிவமாக இரமணாகரன் திகழ்கின்றார். “அடக்கமுடையார் அறிவிலர் என்றெண்ணி கடக்க கருதவும் வேண்டாம்” என்று மூதுரையில் ஔவையார் கூறிய வாக்கு இவருக்கு சாலப் பொருத்தம். இரமணாகரன் அவர்கள் பல்வகை ஆளுமை மிக்கவர். இவரது ஆளுமைகள் நல்ல ஒரு கலைஞன், கவிஞன், எழுத்தாளன் என பரந்து விரிந்து செல்கின்றது. சித்திர பாட ஆசிரியரான இவரது கலைப்படைப்புக்கள் உயிரோட்டம் மிக்கவை “இரேகையில் சித்திரம்” என்ற வரைதல் நூல் இதற்கு சான்று பகர்கின்றது “கவிஞனின் கவித்துளிகள்” என்ற கவிதை நூல் மூலம் தன்னை ஒரு தரம் மிக்க இளம் கவிஞனாக அடையாளப்படுத்தி இருக்கின்றார் இதற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் “கல்” என்ற சிறுகதை அமைகின்றது. இது இவரது கலைப்பயணத்தின் மேலும் ஒரு படிக்கல்லாகும். இவரது இந்த படைப்புகள் தொடரவேண்டும் வளரவேண்டும், சிறக்கவேண்டும் இதற்கு எல்லாம் வல்ல புதறாணைப் பதி ஸ்ரீசித்தி விநாயகப் பெருமானின் அருளை பிரார்த்தித்து ஆசி கூறுகின்றேன்.

**திரு. இ. பிரதாபசர்மா** (R. P. **சர்மா**)
ஆசிரியர்
யா/ மகாஜனக் கல்லூரி
தெல்லிப்பளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் இலக்கியங்கள் மாணவர்களின் வாழ்வில் ஒளியை ஏற்றவேண்டும்



தற்போது மாணவர்களிடம் அருகி வருகின்ற கலையான சித்திர பாடத்தை மிகவும் எளிய முறையிலும் விரும்பக்கூடிய முறையிலும் கற்பித்து வரும் ஆசிரியர் திரு.பாலசுந்தரம் இரமணாகரன் அவர்கள் தனது கலைத்துறையின் அற்புதமான ஒரு படைப்பாக சித்திரங்களுடன் சிறுவர்களைக் கவரக் கூடிய வகையில் "கல்" என்ற தலைப்பிலான சிறுவர் சிறுகதைத் தொகுதியை வெளியிட முன்வந்தமைக்கு எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். சிறுவர்களிடையே வாசிப்புப் பழக்கம் குறைந்து வருகின்ற நிலையில் ஓவியங்களுடன் மனித மன உணர்வுகளையும், உயர்ந்த சிந்தனையுடன் கூடிய எண்ணக் கருத்துக்களையும் வெளிப்படுத்தும் வகையில் வெளியிடப்படுகின்ற இந்த நூல் சிறுவர்களை மட்டுமல்லாது, வளர்ந்தவர்களையும் வாசிக்கத் தூண்டும் வகையில் மிக இலகுவான மொழி நடையில் படைக்கப்பட்டுள்ளது. அவரது மொழி ஆற்றலைப் புலப்படுத்துகின்றது.

கடவுள் ஏன் கல்லானார் என்ற சிறுகதையுடன் மிகவும் சுவாரசியமாக ஆரம்பித்து கல், நான் பிரயோசனமானவன், விளையாட்டுப்போட்டி ஆகிய சிறுகதைகளினூடாக சிறுவர்களிடையே நற்பண்புகளையும்,மனித விழுமியங்களையும் வளர்க்கும் வகையிலான கருத்துக்களை வெளிப்படுத்தியிருப்பது, அவரது புனிதமான ஆசிரியத்துவப் பண்புகளை வெளிக்காட்டுகின்றது.

இன்று புனை கதை இலக்கியங்களும், கவிதைகளும் அதிகளவில் வெளிவந்த அளவுக்கு தமிழில் சிறுவர் இலக்கியங்கள் குறைவாகவே வெளியிடப்பட்டு வருகின்றது. சிறுவர் இலக்கியத் துறையில் ஒரு தேக்க நிலையையே ஏற்படுத்தியுள்ளது. இத்தகைய இலக்கிய வறுமையைப் போக்கும் வகையில் எமது எழுத்தாளர்கள் அதிகளவில் சிறுவர் இலக்கியங்களைப் படைப்பதற்கு முன்வரவேண்டும்.அதற்காக எமது எழுத்தாளர்கள் வாசிப்புத் திறனையும்,நற்பண்புகளையும் வளர்க்கக்கூடிய உயர்ந்த விழுமியங்களை வெளிப்படுத்தி அவர்களது வாழ்வில் ஒளியை ஏற்றும் இலக்கியங்களைப் படைத்து தமிழ் அன்னைக்கு அணிசெய்ய வேண்டும்.

அந்த வகையில் திரு.பாலசுந்தரம் இரமணாகரன் அவர்கள் தனது மூன்றாவது "கல்" என்ற சிறுகதைத் தொகுதியை வெளியிட முன்வந்துள்ளமைக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவர் மேலும் இவை போன்ற சிறுவர் இலக்கியங்களையும்,சித்திர பாடம் தொடர்பான நூல்களையும் தமிழில் ஆக்குவதற்கு முன்வரவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கின்றேன்.அவரது இந்த அரிய படைப்பை பாடசாலை நூலகங்களில் வைத்து மாணவர்களின் வாசிப்புத் திறனை உயர்த்துவதற்கான ஆக்கபூர்வமான முயற்சிகளை பாடசாலை அதிபர்களும்,ஆசிரியர்களும் மேற்கொள்ளவேண்டும்.

கலாநிதி.கந்தையா சர்வேஸ்வரன்
கல்வி,பண்பாட்டலுவல்கள்,விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர்,
வடமாகாணம்

கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன்
அமைச்சர்
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
வடக்கு மாகாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச்செய்தி

எமது மண்ணின் ஆசிரியர் பெருந்தகை திரு.பா.இரமணாகரன் அவர்களால் வெளியிடப்படும் "கல்" எனும் நூலுக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெரும் மகிழ்வடைகிறேன்.

சிறுவர் கதைகள் என்ற நிலையில் இருந்து சிறுவர் சிறுகதைகள் எனும் பெயரில் பல்வேறுபட்ட வெவ்வேறு விதமான சிந்தனைப்போக்குடன் இந்நூல் வெளியிடப்படுகிறது.

கல்வி எனும் மூன்றெழுத்தில் முதல் இரு எழுத்துக்களை கொண்டமைந்த "கல்" எனும் நூல் எமது சமூகத்தில் புரையோடிப்போய் இருக்கும் கலாசார பண்பாட்டு பாரம்பரிய விழுமியங்களை எடுத்தியம்பும் என்பதனை எதிர்பார்க்கிறேன்.

தனது சிறுவயது முதல் இன்று வரை கடந்த கால அசாதரண சூழ்நிலையின் மத்தியிலும் தனது அயராத முயற்சியினாலும் குடும்பத்தினரின் ஊக்கத்தினாலும் பல்வேறு நூல்களை வெளியிட்ட பெருமை இவரையே சாரும்.

கலைத்திறமையும், கவித்திறமையும் ஒருங்கே கொண்ட இவரின் பணியினை நல்லுலகு கூறும் தமிழ் மண்ணுடன் எனது பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

கல்லிலே கலை வண்ணம் கண்டான் எனும் பாடலில் வெளிப்பாடாக ஆசிரியரின் எண்ணம் கல் எனும் நூலாக வடிவமைக்கப்பட்டுள்ளது என்பது ஒரு பெருமைக்குரிய விடயமாகும்.

இவரது கலைப்பணி எமது மண்ணில் தொடர எல்லாம்வல்ல இறைவனின் ஆசீரை வேண்டிக்கொள்கிறேன்.

சுபாஜினி மதியழகன்
பிரதேச செயலாளர்
கோப்பாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்த்துச் செய்தி

கல்வித்துறையில் கற்றல், கற்பித்தல் ஆகிய இரு செயற்பாடுகளும் வினைத்திறன் மிக்கதாகும்போது கல்வியின் நோக்கம் நிறைவேற்றப்படுகிறது. கற்றற் செயற்பாட்டை வலுவுள்ளதாக்குவது ஆசிரியரின் பணி. கற்பித்தற் செயற்பாட்டை வினைத்திறன் கொண்டதாக மாற்றுவதும் ஆசிரியரதும் அவரை வழிப்படுத்துவோரதும் பணி. அழகியற் பாடங்களான சங்கீதம், சித்திரம், நடனம், நாடகம் முதலான வற்றைக் கற்பிக்கும் ஆசிரியர்களின் மறுபக்கம் அவர்கள் கலைஞர்கள் இக் கூற்றை இந் நூலாசிரியரான திரு. பா. இரமணாகரன் உறுதிப்படுத்தியுள்ளார். கற்பித்தலில் தேசிய டிப்ளோமாவை சித்திர பாடநெறியில் நிறைவு செய்து சித்திர ஆசிரியராக யா/ மாதகல் சென். ஜோசப் மகாவித்தியாலயத்தில் பணி புரிபவர். சித்திரக் கல்வி இன்று க.பொ. த. (உ.த) வகுப்புக்களின் தொழில்நுட்பத்துறையில் ஒரு பாடமாக இணைக்கப்பட்டதன் வாயிலாக இப்பாடநெறியின் முக்கியத்துவம் புலனாகிறது.

இந்நூலாசிரியர் தனது பாட நெறியான சித்திரத்தை இலகுவாகக் கற்கவும், கற்பிக்கவும் இரேகையில் சித்திரம் என்ற நூலை தரம் 6 - 11 மாண வர்களுக்காக வெளியிட்டுள்ளார். மேலும் அவரிடமுள்ள கவி படைக்கும் ஆற்றலை கலைஞனின் கவித்துளிகள் என்ற அவரது நூல் எடுத்துக்காட்டுகிறது. கவிதைகளை விளங்கிக்கொள்ள அந்நூலில் ஆசிரியர் வரைந்துள்ள சித்திரங்கள் அக்கவிதைகளை எம் மனதில் ஆழமாய்ப் பதிய வைக்கின்றன. இக் கவிதைகள் பாரதியார் வைரமுத்து, மேத்தா முதலானோரின் கவிதைகளினது வாசனை இங்கு காற்றோடிணைந்து வருகிறது. ஓவியனாக, கவிஞராக மட்டுமல்ல இவர் ஒரு சிறுகதை ஆசிரியர் என்பதை இன்று வெளியிடப்படும் கல் என்ற சிறுகதைத் தொகுதியூடாக நிலைநிறுத்தியுள்ளார். தாரமும் குருவும் இவருக்கு நல்ல தலைவிதியாக அமைந்தமை, இவரது கடின உழைப்பு, கிடைத்த அனுபவங்கள் பல்வகை ஆற்றலுள்ளவராக இவரை அடையாளம் காட்டுகின்றன. இத்தகைய உள்ளார்ந்த திறன்களை மேலும் இந்நூலாசிரியர் வளர்க்கவும், ஆசிரியப்பணியைச் சிறப்புடன் ஆற்றிடவும் எல்லாம் வல்ல இறைவனின் ஆசிகளை வேண்டி, வடமாகாணக் கல்வித்திணைக்களத்தின் வாழ்த்துக்களையும் கூறிக்கொள்வதில் பெருமகிழ்வடைகிறேன்.


**திருமதி. மதிவாணி விக்னராஜா**

அழகியற்பிரிவு

வடக்கு மாகாணக்கல்வித்திணைக்களம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை



இன்றைய மாணவர்களை நல்லொழுக்க முள்ளவர்களாக ஆக்குவதற்கு ஆசிரியர்கள் பல நல் வழிகாட்டல்களை மேற்கொள்ள வேண்டிய முக்கியமான காலத்தில் வாழ்ந்து வருகின்றோம். இதற்கு ஏற்ப யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் என்னிடம் கற்ற நன் மாணாக்கர்களுள், நல்லாசிரியராக விளங்கும் திரு.பா. இரமணாகரன் அவர்கள் இன்றைய மாணவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சிறந்த கதை நூலை எழுதி வெளியிடுகின்றமையைப் பாராட்டுகின்றோம். "வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான்" என்பதற்கமைய மாணவர்களுக்கு அறிவு, ஆற்றல்கள், ஒழுக்கம், பொறுமை என்பவற்றை வாசிப்பினூடாக வழங்க முடியும். மாணவர்கள் ஆர்வத்துடன் வாசிக்கும் நூல்களை வெளியிடவேண்டிய இன்றைய சூழலில் திரு.இரமணாகரன் அவர்களின் முயற்சி பெறுமதியானது. "நமக்குக் கற்றுக் கொடுப்பவரெல்லாம் ஆசிரியர் அல்ல. யாரிடம் நாம் கற்றுக் கொள்கின்றோமோ அவரே எமக்கு நல்லாசிரியர்" என்ற வகையில் இரமணாகரன் பல மாணவர்களுக்கு ஆர்வத்துடன் வாசித்துக் கொள்ளக் கூடிய நூலை எமக்குத் தந்துள்ளார்.

இந் நூலில் நல்ல கல்விச் சிந்தனைகள், விழுமியப் பண்புகள், சவால்களுக்கு எவ்வாறு முகம் கொடுத்தல், மூத்தோரை மதித்தல், நேர்மையாக வாழ்தல் பெற்றோருக்கு உதவி செய்தல் ஆகிய நற்பண்புகள் எடுத்தியம்பப்படுகின்றன. ஆசிரியர்களும் பெற்றோர்களும் இவ்வாறான நூல்களை மாணவர்கள் வாசிக்கத் தூண்ட வேண்டும். அதற்கான சந்தர்ப்பங்களை வழங்க வேண்டும் இதனூடாக மாணவர்களுக்கு ஆக்கத்திறன்கள் விருத்தியடையும் மனிதத்துவப் பண்புகள் விரிவடையும். இவையே இன்றைய இளைய சமூகத்திற்குத் தேவையாகவுள்ளன. இவ்வகையில் ஆசிரியர்களுடைய ஆக்கத்திறனூடாக மாணவர்களின் ஆற்றல்கள் விருத்தியடையும் என்பதற்கிணங்க திரு. பா. இரமணாகரன் அவர்களின் ஆக்கத்திறனினூடாக சித்திர வினாவிடை, இரேகையில் சித்திரம், கலைஞனின் கவித்துளிகள் என்பன வெளிவந்திருக்கின்றன. இவற்றின் தொடர்ச்சியாக கல் சிறுவர் கதைகள் என்ற நூல் வெளிவருகின்றது. கதையுடன் திரு. பா. இரமணாகரன் அவர்களின் கைவண்ணத்தில் ஓவியங்களும் வரைந்திருப்பது சிறந்த புலக்காட்சியை ஏற்படுத்துகின்றது. தொடர்ந்தும் கதை ஆக்கத்திறன்களை நூல்களாக வெளியிட்டு மாணவர்களுக்குப் பயனுள்ள செயலாற்றுகைகளை மேற்கொள்ள வேண்டுமென திரு.பா.இரமணாகரன் அவர்களை வேண்டுகின்றேன். அவருடைய ஆற்றல், ஆளுமை, ஆக்கத்திறன், விழுமியப் பண்புகள் போற்றப்பட வேண்டியவை. எனது வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**கலாநிதி பா. தனபாலன்**

உபபீடாதிபதி, யாழ்ப்பாணம் தேசிய கல்வியிற் கல்லூரி, நிபுணத்துவ ஆலோசகர்,

சமயவிழுமியப் பிரிவு, கல்வியமைச்சு, பத்திரமுல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை



சிறுவர்களுக்கு கதைகள் வாசிப்பதிலும், கேட்பதிலும் ஆர்வம் அதிகம். அவ்வாறு வாசிப்பதன் மூலம் அவர்களது மனம் இலகுவாகி அது கல்விக்கு நல்ல துணையாக அமையும் என்பது நம்பிக்கை. சின்னச் சின்னக் குட்டிக் கதைகளை வாசிக்கத் தூண்டுவதும் அதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலமும் சிறார்களின் வாசிப்புத் திறனை வளர்க்க முடியும். அது அவர்களின் கற்றலுக்கு நல்ல ஊக்கியாக அமையும் என்பது கற்றோர்களின் சிந்தனை.

இன்று எமது மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கம் வெகுவாக நலிந்துள்ளதைக் காணமுடிகின்றது. முன்பெல்லாம் எமது பாட்டன், பாட்டிமார்கள் தமது பேரப்பிள்ளைகளைத் தமது மடியில் இருத்தி அன்பு பாராட்டி அவர்களுக்கு நல்ல விழுமியம் சார் கதைகளைக் கூறி பிள்ளைகளுடன் பொழுதைக் கழித்து மகிழ்ந்தார்கள். பிள்ளைகளுக்கும் அது மகிழ்ச்சியைத் தந்தது.

அதனால் இன்று அந்த வாழ்வியல் வெகுவாகப் பலவீனப்பட்டு நிற்கின்றது. பிள்ளைகளின் கல்விச்சுமை அதற்கெல்லாம் சந்தர்ப்பம் தருவதில்லை. யாரும் அது தொடர்பாகச் சிந்திப்பதுமில்லை.

பாடசாலை: பாடசாலை முடிய "ரியூசன்" என்கின்ற பிரத்தியேக வகுப்புகள் அது முடிய வீடு என்று பிள்ளையின் பொழுது கழிகின்றது தவிர அவர்களிடம் வாசிப்புத்திறன் விருத்திக்கோ கேட்டல் திறன் விருத்திக்கோ வாய்ப்புக் கிட்டுவதில்லை.

மேலும் கதைகள் மூல பிள்ளைகளுக்கு மாத்திரமன்றி பெரியவர்களுக்கு நல்ல விழுமியங்களும், நீதி நெறிமுறைகளும் கூறப்பட்டுள்ளன. 'பொய் சொல்லலாகாது பாப்பா" என்றார் மகாகவி அதனை மக்கள் மனதில் பதிய விட்டுக்கொள்ள "அரிச்சந்திரன் கதை" முன்பே தோன்றியிருந்தது.

"அரசியலில் தவறு செய்பவர்களை அறமே கூற்றுவனாகித் தண்டிக்கும், நாம் முற்பிறப்பில் செய்த நல்ல தீய வினைகள் இப்பிறப்பிலும் பாதிப்பைத் தரும், கற்புடைய பெண்கள் தமைக் கற்றோரும் சான்றோரும் போற்றுவர் என்கின்ற நீதியான சிலப்பதிகாரக் கதை மூலமும் மக்களிடம் கூறியிருந்தார்கள்.

அதனால் இன்று மாணவர்களுக்கான விழுமியம் சார் கதைகளோ அல்லது நெறிமுறை கூறும் கதைகளோ நூல் வடிவம் பெறுவது குறைந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டது. பிள்ளைகளின் நேரமின்மை, வாசிப்புப்பழக்கம் அற்றுப் போனமை போன்றவை அதற்குக் காரணமாகலாம்.

இக்குறையினைப் போக்கும் நோக்குடன் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் கல்வி கற்று, தற்போது ஆசிரியராகவுள்ள திரு.பா.இ.ரமணாகரன் முயற்சியினையும் மனதாரப் பாராட்டுகின்றேன். இந்த நூலில் "நான் பிரயோசனமானவன்","கல்", கடவுள் ஏன் கல்லானார்" "விளையாட்டுப் போட்டி" என்ற கதைகள் ஊடாக மிக இலகு நடையில் பிறர் பொருளுக்கு ஆசைப்படாமை", "எம்மிடம் இருக்கும் அல்லது வளர்க்கப்படும் சிறிய திறன்களும் ஏதோ வகையில் எமக்குதவி நிற்கும்", கடவுளைக் கல் என்று நினைப்பவர்களுக்கு அவர் கல், இந்தக் கல்லைக் கடவுளாகக் காண்பவர்க்கு அவர் கடவுள் என்ற கருத்தாழமிக்க சிந்தனையையும் நூலில் உள்ள கதைகள் மூலம் அவர் தெளிவாக்கியுள்ளார்.

திரு. பா. இ. ரமணாகரன் சிந்தனையையும், செயலினையும் பெரிதும் பாராட்டி ஆசி கூறுகின்றேன். அவரது இந்தப் பணி தொடரவேண்டும். இதற்கு எல்லாம் வல்ல நல்லூர் முருகப் பெருமான் அருள் பாலிக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

நாயன்மார்கட்டு,
நல்லூர்,
யாழ்ப்பாணம்

**கலாநிதி. திருநாவுக்கரசு கமலநாதன்**
நிறுவுனரும், முதலாவது பீடாதிபதியும்,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை



வடலியடைப்பு புதறாணை ஸ்ரீ சித்திவிநாயகர் துணையோடும், மாவையூர் கந்தனின் சிவஞான சித்தியின் திருவருளோடும் துணிந்து, அவன் பாதங்களில் பணிந்து, எழுதி இயம்ப முயன்ற அறமே. கல்லென்னும் சிறுகதைத் தொகுப்பாகும்.

காலில் தடக்குப்பட்டு காலில் புண்வரச்செய்த கல்லை எடுத்து, குறிபார்த்து எறிந்து வயிற்றுப்பசியை மட்டுமல்ல களவையும், தாலியையும் காத்த கந்தனின் திருவருளும், சும்மா கிடந்த கல்லை பிள்ளையாராக வடிவமைத்த சிற்பி அதை எல்லோரும் வழிபடும் நிலையை ஏற்படுத்தியமையும், மறைந்திருக்கும் இறைவனை மனிதனால் மட்டுமே வெளிக்கொண்டுவர முடியும் என்றும், அதற்கும் அதற்குரிய படிமானமுள்ளவர்களால் மட்டும் முடியும் என்ற செய்தியும் உணர்த்தப்படுகிறது.

இந்த உலகத்தில் படைக்கப்பட்ட மனிதர்கள் ஏதோ ஒரு வகையில் பிரயோசனமானவர்கள் தான். அவர்களுக்கென்று ஒரு சந்தர்ப்பம் வரும்போது அது வெளிக்கொண்டுவரப்படும். அந்த சந்தர்ப்பம் எல்லோருக்கும் வரும் சரியான முறையில் பயன்படுத்தினால் வெற்றியாளர்களாக முன்னேற முடியும்.

நினைக்கும் தோறும் இக்கதைகள் சிறுவர்களுக்கு சித்திபெற உதவும் "மனித பக்திக்கு இரங்காத தெய்வமில்லை அவன் சக்திக்கு இயலாத காரியமுமில்லை" இது என் வாக்கு இயல்பாக உள்ளதை இயல்பாகக் கொடுப்போமெனில் அதை தடுப்பார் எவர்? கொடுக்கக் கொடுக்க குறையாதது கல்வி. எழுத எழுத ஏணிபோல் உயர்த்திச் செல்லும் எழுத்து. மேல் இருந்து கீழ் நோக்கி வாசிக்க கீழ் இருந்த வாழ்வை மேல் உயர்த்தும் வாசிப்பு.

வாசிப்புப் பழக்கமின்மையால் ஆன்மீகப் பண்புகள் சார்ந்த ஒழுக்க விழுமியங்கள் நலிந்து காணப்படும் நிலையறிந்து கதையுடன் படவிளக்கக் காட்சிகளும் கொண்டு கவர்ச்சியாக கதை மூலம் உண்மைகளை உரைக்க முடியுமென இவ்வாக்கம் மூலம் உணர்கின்றேன்.

**ஆசிரியர்**
**மாவையூர் கவி**
சன்னதி வீதி, இடைக்காடு, அச்சுவேலி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும் திறனையும் சந்தர்ப்பத்தையும்
பயன்படுத்தி வெற்றி அடைவோம்

பணிந்து படித்தால் உயர்ந்து வாழலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1

# கல்

கந்தன் எப்பவுமே ஒரு சாந்தமான குண சுபாவம் கொண்ட இயல்புடையவனாக இருந்தான். கந்தபுரம் என்ற அந்தக் கிராமத்தில் உள்ள பள்ளிக்கூடத்தில் தரம் ஒன்பது மட்டுமே இருந்தது. இருந்தாலும் அந்தப் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் எல்லோருமே சிறந்த ஊக்கம் மிக்கவர்களாகவும் உயர்ந்த எண்ணம் கொண்டு தம் கிராமத்தை வளர்ப்பதில் ஆர்வம் கொண்டு உழைத்தனர். இதனால் கந்தனும் சிறப்பாகக் கற்று வந்தான்.

அன்று காலை கந்தனும் விடியவே எழுந்து வழமை போல் பாட சாலைக்குச் சென்றான். போகும் வழியில் இரண்டு பக்கமும் வளர்ந்த முட்புதர்களும், செடிகளும் வளர்ந்து அடர்ந்து பார்க்க காடு போல ஆனந்தமாக இருக்கும். ஆனால் பின்பக்கம் ஆட்களற்ற நடமாட்டம் இல்லாத பகுதியில் இனந் தெரியாதவர்கள் நடமாடுவது வழமை.

கந்தன் அவை தொடர்பாக அறிந்திருந்தும் அலட்டிக்கொள்வதில்லை. தன்பாட்டில் பாடிக்கொண்டு நடந்து வருவான். காலில் பட்ட கல்லை எடுத்து எறிவான். பொழுதுபோக்காக எறிந்து எறிந்து வருவதால் கந்தனுக்கு எறிவதில் நிகர் எவரும் இருக்க முடியாது. வரும் வழியில் உள்ள மாங்காய், தேங்காய் என எறிந்து விழுத்திச் சாப்பிடுவதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லமை மிக்கவனாக இருந்தமையால் இவனுடைய நண்பர்களும் அதிகரிக்கவே செய்தது. ஏனெனில் சுயநலத்திற்காக. கந்தன் போகும் வழியில் ஏதாவது சாப்பிடலாம். அவன் எறிந்து விழுத்தி பிடுங்கித் தருவான் என்று நண்பர்கள் நம்பினர்.


கந்தபுரம் என்றால் கந்தன் என்ற அளவுக்கு கதை குறைவு காரியம் பெரிது போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டான்.

தரம் எட்டில் கல்வி பயிலும் கந்தனுக்கு வகுப்பாசிரியர் வசந்தன் அவர்கள் சுற்றாடல் பாடம் கற்பிப்பவர். கந்தனுக்கும் ஆசிரியரில் நல்ல விருப்பம். ஆசிரியரும் அப்படியே. எல்லா மாணவர்களுடனும் தொடர்பைப் பேணினார். வகுப்பில் நல்ல சிந்தனைகள் கூறுவதனூடாகத்தான் ஒவ்வொரு நாளும் பாடம் தொடங்குவார் ஆசிரியர். அதேபோல் அன்றும் சூழலில் உள்ள கற்களைப் பொறுக்கி அதற்கு என்று ஒரு இடம் அமைத்து சேர்த்து வந்தால் அதனை தேவைக்குப் பயன்படுத்தலாம் என்று அறிவுரை சொன்னார்.

கந்தன் உடனே எழுந்து கல்லை என்ன சேர் தேவைக்கு பயன்படுத்த முடியும்? என்று வினாவ ஆசிரியரும் நான் விடை சொல்வதிலும் விட ஒவ்வொரு மாணவரும் எழுந்து கல்லின் பிரயோசனம் பற்றி கூறுமாறு பணித்தார். ஒவ்வொரு மாணவர்களும் தங்களுக்கு தெரிந்த மட்டில் எழுந்து வீடு கட்ட, மதில் கட்ட, கோயில் கட்ட என்று சொல்லிக்கொண்டே இருந்தனர். கந்தனின் சந்தர்ப்பம் வந்தது. எழுந்தான் சுற்றுப்புறமும் பார்த்தான் சேர்!! உள்ளதைச் சொன்னால் நக்கல் பண்ணமாட்டீங்கள் என்றால் சொல்கிறேன். இல்லையென்றால் விட்டுவிடுங்கள் என்றான். வசந்தன் ஆசிரியரும் விடவில்லை புதிர் போடாமல் உள்ளதைச் சொல்லு. நீ இங்கே "கல்" கற்க வந்திருக்கிறாய். உன்னை யாரும் நக்கல் பண்ண முடியாது. அப்படி என்னை மீறி நக்கல் செய்தால் அவர்களுக்கு நான் சரியான பாடம் புகட்டுவேன். என்னை நம்பி இனிச் சொல்லும் பார்க்கலாம் என்று அன்பாக நிதானமாகக் கேட்டார் ஆசிரியர்.

கந்தன் சொன்னான் எனது காலை உணவையும் சிலவேளை மதிய உணவையும் இந்த வீதியில் உள்ள கற்கள் தான் பெற்றுத் தருகிறது என்றான். இடையில் குறுக்கிட்ட மாணவரில் ஒருவர் எழுந்து கந்தனின் அப்பா கல்லுடைக்கின்ற வேலைக்குப் போறவர் போல என்றதும் ஆசிரியர் குறுக்கிட்டு அப்பா அம்மாவின் தொழில் சம்பந்தமாக தேவையில்லாமல் யாரும் கதைக்கக் கூடாது என்று ஒரு பார்வையில் பல கதை சொன்னார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடன் வாயடைத்த மாணவன் பயத்தில் இருந்தான். பார்த்திருந்த மாணவர்களும் எந்தக் கதையும் இல்லாமல் கண்ணுக்குள் எண்ணெய் விட்டது போல் விழிகளைப் புரட்டிக்கொண்டு இருந்தார்கள்.

கந்தன் சிறிய அமைதியின் பின் தொடர்ந்தான் சேர் நான் காலை உணவு வீட்டில் சாப்பிடுவது இல்லை. அப்பா ஷெல் பட்டு இரண்டு காலும் இல்லை. அவர் வேலைக்குப் போறது இல்லை. அம்மா தான் தோட்ட வேலைக்கு காலையிலேயே போய்விடுவார்.

பின்னேரம் நான்கு மணிக்குப் பிறகுதான் வருவார்கள். சமையல் செய்வார்கள் ஒரேயடியாக இரவு மட்டும் தான் ஒரு நேரமாகச் சாப்பிடுவினம். எனது சினேகிதர்கள் சொல்லுகினம். தாங்கள் மூன்று நேரம் சாப்பிடுவதாக, எனக்குப் பசியாக இருந்தால் வீதியால் வரும் போது, நாவற்பழம், அன்னமுன்னாப் பழம், ஈச்சம்பழம், இலந்தைப்பழம், தோடம்பழம், கொப்பறாத் தேங்காய் போன்ற வற்றை கண்டால் எடுத்துச் சாப்பிடுவேன். இல்லாத பட்சத்தில் தெருவோரமாக உள்ள மரங்களில் தேங்காய், மாங்காய்களைக் கண்டால் கல்லால் அடித்து விழுத்திச் சாப்பிடுவேன். நண்பர்களுக்கும் கொடுப்பேன். இதே பிழைப்பாய் போச்சு சேர்.... என்று கதை சொல்ல எல்லா மாணவர்களும் விறைத்துப்போய் இருப்பினம் என்று ஆசிரியர் நினைத்தார்.

ஆனால் விறைத்துப் போனது ஆசிரியரே. இப்படியும் மாணவர்கள் இருக்கிறார்கள் என்பதை அந்தப் பள்ளிக்கூடம் கஷ்டப்பிரதேசத்தில் உள்ளதும், தான் வந்து ஆறு மாதம் என்பதாலும், இவ்வாறான சம்பவம் அறிவது புதிதாகவே இருந்தது. ஆசிரியர் தன் நிலையை சுதாகரித்துக் கொண்டு கதை ஒருபக்கம் போகாமல் மாணவனை பாராட்டும் நோக்கில் ஒரு போட்டி வைக்க நினைத்தார். உடனே போட்டி ஒன்று வைக்கப் போகிறேன். அதில் பங்குபெறும் மாணவர்கள் எல்லோரும் வெளியே வாருங்கள் என்று கூறவே மாணவர்களுக்கு போட்டி, பரிசு என்றால் நிறையவே ஆசை. உடனே வரிசையாக எழுந்து வந்து நின்றுகொண்டு சேர் நேரம் போகுது சேர். நேரம் போகுது சேர் போட்டியைச் சொல்லுங்கோ என்று கெஞ்சத் தொடங்கினார்.

ஆசிரியர் சோக் ஒன்றை எடுத்துச் சென்று ஒரு மரத்தடியில் நின்று நடுப் பகுதியில் ஒரு வட்டம் போட்டார். பின் உள்வட்டம், வெளிவட்டம், மையப்புள்ளி என்பவற்றைக் குறித்துவிட்டு ஒரு கல் எடுத்துக் கொண்டார். கையுக்குள் அளவாக அமைந்த கல்லைத் தேர்ந்து அதனை வரிசையில் நிற்கும் மாணவர்கள் எடுத்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஒவ்வொரு மாணவரும் ஒரு எறி எறிதல் வேண்டும். அது மரத்தில் வரைந்த மையத்தில் விழுந்தால் முதலாம் இடம் உள்வட்டத்தில் வெளிவட்டத்தின் தன்மைக்கு ஏற்ப இரண்டாம் மூன்றாம் இடம் தெரிவு செய்யப்படும் என அறிவித்தார்.

மாணவர்களும் ஆர்வத்துடன் போட்டியில் பங்கு கொண்டனர். கந்தனும் நின்ற வரிசையில் நின்று அடுத்த அடுத்த வரிசைக்கு பின்வாங்கிக் கொண்டு இருந்ததை ஆசிரியர் அவதானித்தார். இருந்தும் கண்டும் காணாதது போல் நடந்து கொண்டார். ஆயினும் எப்படிப் பின்னுக்குப் போனாலும் இறுதியில் முதலாவதாக கந்தன் எறியும் முறை வந்தே தீரும் என்பது ஆசிரியருக்குத் தெரியும். எனவே பொறுமையாக இருந்தார். எல்லா மாணவர்களும் எறிந்து எல்லாம் வெளியில் பட்டது போக இரண்டாம் மூன்றாம் வட்டங்களில் பட்டு இரு மாணவர்கள் தெரிவாகி இருந்தனர். அவர்களுக்கு சற்றுத் தலைக்கனம் அதிகரித்தது. கேலி செய்தனர். ஏதோ கல்லெடுத்து எறிந்து சாப்பிடுறவராம். இப்ப பின் பக்கம் போறார். இப்படியே பின்னுக்குப் பின்னுக்குப் போய் வீட்டை ஓடப் போறார் போல இருக்குது. என்று நகைச்சுவையாக சிரித்துக் கொண்டனர்.

வசந்தன் ஆசிரியரும் வந்த நாட்களில் இவன் கந்தனுடைய நடவடிக் கையைப் பார்த்தால் கந்தனுக்குரிய அந்தப் பேருக்குரிய இறையுணர்வு இருக் கத்தான் செய்தது. அதை பல தடவைகள் உணர்ந்திருந்தார்.

மனதில் ஒரு சம்பவம். ஆசிரியருக்கு ஞாபகம் வந்தது செம்மறி ஆடு யாரும் போனால் அல்லது சண்டை என்றால் பின்னோக்கிப் போய்விட்டு எதிர்பாராத விதமாக திடீர் என வேகமாகத் தாக்கும் இயல்பு கொண்டது. அதேபோல் கந்தனும் பின்னோக்கிப் போகும் தன்மையை உணர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அடுத்த கணமே கந்தனுடைய சந்தர்ப்பம் வரவே கந்தன் கல்லெடுத்து குறிபார்த்து எறிந்த எறியில் ஆசிரியர் வைத்த மையப்புள்ளியில் பட்டு அந்த மரத்துடன் ஏறி உள்போய் நின்றுகொண்டது. பார்த்து நின்ற மாணவர்கள் எங்கே கல் எறியவில்லையோ! எறிந்தது வெளியே சென்றுவிட்டதோ! இவர் தோத்துப் போனார் என்று தாம் வென்றதாகக் கூட குரல் எழுப்பவே ஆசிரியர், மாணவன் கந்தன் கைகளைப் பிடித்து உயர்த்தி வெற்றியை அறிவிக்க அசந்து போனார்கள். உடனே மாணவர்களில் ஒரு மாணவன் இவர் எறிந்த கல் எங்கே என்று கேட்டான். கந்தன் ஓடிப்போய் எறிந்த வேகத்தில் பதிந்த கல்லை தட்டி எடுத்து வந்து காட்டினான். இதன் மூலம் சகல மாணவர்களும் கந்தனைப் பராட்டினார்கள். அன்றைய வகுப்பும் பெல்லடிக்க முடிந்தது. அவரவர்கள் தம் வீடுகளுக்கு புறப்பட்டுச் சென்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கந்தனும் சென்றுகொண்டு இருக்கும் நிலையில் திருமண வீடு ஒன்றிற்காக போவதற்கு ஒரு பெண்ணொருவர் நல்ல உடுப்பு நடப்போடு தாலிக்கொடியும் அணிந்தவாறே பளபளவென மினுங்க நடந்து வந்தார். திடீரென ஒரு மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் முகத்தை ஹெல்மெற்றால் மறைத்தவாறே வந்தவர்கள் ஒரு தடவை மிகவும் மெல்ல மெல்ல அவதானித்து போவதை கந்தன் பார்த்தான். இந்த இடத்தில் ஏதோ அசம்பாவிதம் இடம்பெறப் போவதை உணர்ந்தான். இருப்பினும் பெண் தன்பாட்டில் எதையும் பொருட் படுத்தாமல் நடந்து சென்றாள். போன மோட்டார் சைக்கிள் கந்தனுக்கு மிக நெருக்கமாக வரும் வகையில் திரும்பி வந்துகொண்டிருந்தது. கந்தனுக்கு ஏதோ பயம் தொட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கந்தனின் ஆயுதம் கல் இருந்தாலும் கல் எடுக்கவில்லை. எங்கும் கையுக்கு ஒரு அளவான கல் இருக்குமோ என்று சுற்றும் முற்றும் கடைக்கண்ணால் பார்த்தான். ஒன்று தென்பட்டது. வந்த மோட்டார் சைக்கிளும் இவன் அருகால் பட்டும்படாமல் போனது இன்னும் குறிப்பிட்ட தூரம் மெல்ல மெல்ல செல்வதை அவதானித்த கந்தன் தன் ஆயுதத்தை கல்லை டக் என்று கைக்குள் எடுத்து நிதானமாக நடந்தான்.

நடந்து வந்த பெண்ணிடம் சாடையாகக் கேட்டான் கந்தன், உங்களுக்கு மோட்டார் சைக்கிளில் செல்பவர்கள் யாரையாவது தெரியுமோ? என்று. அவளும் தெரியாது என்றவுடன் கந்தனுக்கு சந்தேகம் இன்னும் வலுத்தது. உசாராக நடந்தான். அதற்கிடையில் அந்தப் பெண்ணிடம் நீங்கள் தனியாகவோ இந்த இடத்தால் வந்தீர்கள். இது பயங்கரமான பாதை தெரியாதோ என்று கதை யெடுப்பதற்குள் போன அந்த மோட்டார் சைக்கிள் திடீரென திருப்பிக் கொண்டு வேகமாக வருவது கடைக்கண்ணால் கண்டான் கந்தன்.

வந்த மோட்டார் சைக்கிள் பெண்ணருகே சென்றது. பின்னுக்கு இருந்த ஒருவர் மோட்டார் சைக்கிளில் இருந்தவாறே பெண்ணின் கழுத்தில் இருந்த தாலிக்கொடியைப் பிடித்து உருவிக் கொண்டு போனார். இருந்தாலும் நிலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடுமாறிய மோட்டார் சைக்கிள் அருகில் உள்ள மரத்துடன் தட்டுப்பட பின் இருந்து தாலி அறுத்தவர் ஒருவர் இறங்கிவிட்டுத் திரும்ப ஏறினார். இதற்கிடையில் பெண் கத்திக் குளறி நிலத்தில் விழுந்து புரள கந்தன் ஏற்கனவே எடுத்து வைத்திருந்த கல்லைப் பயன்படுத்தி தாலி அறுத்த நபர் கையில் தாலியுடன் தப்ப நினைக்கையில் அந்தக் கணப்பொழுதில் கந்தனின் கண்கள் அவனுடைய கையை குறிவைத்தது. கையில் இருந்த கல் தாலி அறுத்த கள்வனின் கை மணிக்கட்டில் இராமபிரானுடைய அம்பு போல இறங்கியது. உடனே கையில் இருந்த தாலியை கைவிட்டு அந்த மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் ஒரு சிறு பற்றைக்குள்ளால் தப்பி ஓடினார்கள்.

தாலியை எடுத்து அந்தப் பெண்ணிடம் கொடுத்து ஆறுதல் சொல்லி பாராட்டுப் பெற கந்தனுக்கு நேரம் இல்லை. உடன் பின் சென்று தேடிப்பார்த்த பொழுது தப்பி ஓடியவர்கள் ஆள்நடமாட்டம் இல்லாத அந்தக் காட்டில் கல் அகழத் தோண்டிய கிணறு மாதிரியான கிடங்கில் ஒழித்துக்கொண்டதைப் பார்த்து வந்து பொலிஸில் அறிவித்து அவர்களைப் பிடித்த போதுதான் தெரியவந்தது. அவர்கள் அப்பகுதியில் இருப்பவர்கள் என்றும் வேலை ஒன்றும் இல்லாது புகைப்பதற்கும், குடிப்பதற்கும் தேவையான பணத்தைப் பெற்றுக்கொள்ள இவ்வாறான குற்றச் செயல்களில் ஈடுபடுவது காவற்றுறையால் கண்டறியப்பட்டது. ஆட்கள் நடமாட்டம் இல்லாத இடங்களில் நகைபோட்டுக்கொண்டு போவதைத் தவிர்க்கவும் மற்றும் இவ்வாறான பிரதேசத்தில் இனந்தெரியாதவர்கள் நடமாடினால் உடனே பொலிஸ் நிலையத்துக்கு அறிவிக்கவும். இதன் பின்னர் அதிபர், ஆசிரியர், மாணவர்கள் ஊடாக பொதுமக்களுக்கு என விழிப்புணர்வுப் பிரச்சாரம் கந்தன் தலைமையில் இடம்பெற்றது.

கந்தனையும் கந்தனின் ஆசிரியரையும் கல்லின் பிரயோசனத்தையும் அந்த மண்ணில் வாழும் மக்கள் அறிந்துகொள்ள இது ஒரு சந்தர்ப்பமாக அமைந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழி பல தெரிந்தும் கொடுக்காத மொழியாய்
அழிவே மிஞ்சும்

நிரந்தர எதிரியும் இல்லை நண்பனும் இல்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2

# நான் பிரயோசனமானவன்

அன்று காலை சேவல் கூவும் சத்தத்துடன் சூரியனின் ஒளிக்கீற்றுப்பட விடிவதை உணர்ந்த பண்டிருட்டிக்கிராமம் இனிமையான பொழுதாகவே இருக்குமென்று எண்ணிய பறவைகளும் என்றும் பறப்பது போலவே பறந்தன.

ஆடுகள், மாடுகள் தத்தமது கடமைகள் என்ன வென்றெண்ணி உணவு தேடப்புறப்பட்டன. விடியற் காலைப்பொழுதில் இளம் சூரியனின் சூட்டில் தமது இறகுகளை உயர்த்திய கோழிகள் சில சாம்பலும் குளித்துக் கொண்டன. இவைகள் மழை வரும் அறிகுறியாகக் கூட இருக்கலாம்.

காலை எழுந்துவிட்ட சாந்தன் கன்னத்தில் இரண்டு கைகளையும் வைத்தவாறு எல்லாவற்றையும் பார்த்த வண்ணம் யோசித்துக் கொண்டிருந்தான். ஒரு மாதகாலம் பாடசாலையில் விடுமுறை விட்டு இன்றுதான் மீண்டும் ஆரம்ப மாகின்றது என்பதை அறிந்தும், அறியாத மாதிரி காலை ஆறு முப்பது மணியிருக்கும். சுவரிலே தொல்பொருளாகக் காட்சி தரும் மணிக்கூடும் அடித்தது. அதுவும் நெஞ்சில் இவனுக்கு திடுக்கிடும் படியாக அமைந்தது.

மணிக்கூடு நெடுநாளாக ஓடாமல் இருந்தது. அதனைத் தகப்பனார் உள்ளிருந்து வெளியே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயரெடுத்து பழைய பற்றியை கடித்துப் போட்டு மின்சாரம் வரச் செய்து றைம்பாம் மாதிரி சுவரில் வைத்திருந்தார்.

இதன் இயக்கம் கண்டு மெய்சிலிர்த்த தகப்பனார் வைரவநாதன் சந்தோசம் அடைந்தார். எட..... நான்.... ஒரு விஞ்ஞானி ஆகிவிட்டன் என்று முணு முணுக்க மூத்த மகன் சாந்தனுக்கு கோபம் கோபமாக வந்தது. உம்....!! உங்கட செய்தி நாளைக்கு பேப்பரில் வந்திருக்கும் நல்லூர்த் திருவிழா நடப்பதால் ...... அந்த விளம்பரம் கூட இடம் பிடிக்கும் என்பதனால் உங்கட போட இடமில்லையென்று புறுபுறுத்தான் சாந்தன்

வைரவநாதனும் இறுமாப்புடன் நீ ..... என்னைப்பற்றி நல்லதாக நினைக்கமாட்டியே !! ஆம்பிளைப் பிள்ளைகள் எப்பவுமே ..... அம்மா பக்கம் தானே ..... . என்பதற்குள் சாந்தனும் இல்லையப்பா ..... நானும் காலையில் எழுந்து உங்களைத்தான் நினைக்கிறன்.


ஆனா ஒன்றும் நல்லதாகவே வரவில்லையே ..... எனச் சாந்தன் சிரித்துக்கொண்டு சொன்னாலும் ..... வைரவநாதனுக்கோ கடும் கோபம் வந்தது. முறாய்த்த பார்வையுடன் வாயிலே என்னமோ ..... எல்லாம் வருது..... எழும்பிப் போ ...... . அப்பு ...... . அங்கால ..... உன்னைப் பெத்த நேரம் ஒரு தென்னம்பிள்ளை வைத்திருக்கலாம் என்று வாய்தடுமாறி வார்த்தையை போட்டு விட்டார் ..... ஒரு குறுகிய நேரம் நிஷப்தம் நிலவியது. இருவரும் ஒருவருக்கொருவர் பார்த்துக் கொண்டனர்.

இரண்டு பேரும் ஏதோ பாலைவனத்தில் விடப்பட்டது போல உணர்ந்த கணப்பொழுது மன்னிப்பதற்கோ, சகிப்பதற்கோ முடியாததாக ..... அந்த நிமிடம் அமைந்தது. அம்மா இலட்சுமி வீட்டு வேலைகளில் கடுமையாக உழைத்துக்கொண்டு இருப்பவள். கடமையில் கண்ணும் கருத்துமாக இருந்த வேளையில் இவர்களுடைய வாதப்பிரதிவாதங்கள் காதில் விழத்தான் செய்தன. உடனே இலட்சுமி அம்மா தொடங்கினாள்.

விடிய எழுந்து பார்க்கிற வேலையைப் பார்க்காமல் கதையளக்கிறியள் ..... சோம்பேறியள் மாதிரி ..... அவருக்கு வேலைக்குப் போனா ஒரு வேலையில் ஒரு மாதம் கூட நிற்க முடியவில்லை ..... சம்பளத்தோட ஓடோடி வந்து விடுவியள்.


அடுத்த வேலை தேடி வர இரண்டு மாதம் செல்லும் அடுத்த மாதமும் அப்படித்தான் இவற்ற சம்பளத்தை வைத்து. நான் குடும்பம் நடத்துறது எப்படி.?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கணவர் புகழ்பாடி முடிந்தவுடன். மகனின் புராணம் பாடத் தொடங்கினாள் இலட்சுமி அம்மா. ஒன்பதாம் ஆண்டில படிக்கிறனிக்கு எழுதவாசிக்கத் தெரியாது.

ஆடிக்கொருக்கா ..... ஆவணிக்கொருக்கா ஒரு நாள் பள்ளிக்கூடம் போய் வீண் வம்பு விலைக்கு வாங்கிறது. போறது இரண்டு நாள். அதில நான் விளக்கத்துக்கு ஒரு நாள் போகணும் ..... இது ..... எனக்கு வேணும் ..... இன்னும் வேணும் ..... பெற்ற குற்றத்திற்கு வந்து வாய்ச்சினம் எனக்கென்று.



படபடவென்று வார்த்தைகள் அடைமழை போல் பொழியக் காது குடுத்துக் கேட்க முடியாமல் இருவரும் எழுந்து உணவும் உண்ணாமல் தம்பாட்டில் புறப்பட்டார்கள். என்றைக்கும் இல்லாத குற்ற உணர்வு அன்று அப்பாவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார்த்தையும், அம்மாவின் வசைபாடலும் நெஞ்சைத் தைத்தது. "பசுமரத்தாணி போல்" குத்தி வடுவை வேதனையை ஏற்படுத்தியது. எல்லாவற்றையும் தாங்கிக் கொண்டு பாடசாலை போவோம் இனியாவது படித்து முன்னுக்கு வருவோம் என்று நினைத்தால் படிப்பு ஏறவில்லை. எமது கிராமமும் படிக்க வசதியாக இல்லை.

பண்டிருட்டிக் கிராமத்தில் கூடிய தொழில் கடற்றொழில்தான். மிஞ்சினால் கூலி, படித்தவர்கள் இல்லை. ஆரம்பத்தில் படிப்பை விட்டுவிட்டேன் இனி எப்படி படிப்பது? வெக்கமாக இருக்கிறது. அ.. ஆ மட்டை தூக்கப்பகிடி பண்ணுவினம். ஆனால் அவைக்கும் அது தெரியாது "வைக்கோல் பட்டடை நாய்கள்" என்று பலவித சிந்தனையில் முழ்கிய சாந்தன் கால் போன திசையில் நடந்து பள்ளிக்கூடத்தைத் தாண்டி அடுத்த வீதியில் சென்றுவிட்டான். இனித் திரும்ப வந்தால் நேரம் சென்று விடும் ... பாடம் தொடங்கி விடும். என்ன செய்வதென்றறியாது திரும்பவும் யோசித்தான்.


என்னால ஒருவருக்கும் பிரச்சனை வரக்கூடாது இது நான் எடுக்கும் இலட்சியம். அதையாவது முதல்ல செய்வம். அடுத்து உண்மையாக நேர்மையாக நடப்பம் இதன் மூலம் நான் யாருக்கும் பிரயோசனமானவனாக இருக்கலாம் என்றும் மனிதனாய் வாழலாம் என்றும் திடசங்கற்பம் பூணுவம் என்று முடிவெடுத்தான்.

பாடசாலை நேரத்தில் கூலி வேலைக்குச் சென்றால் கிராம சேவகர், பொலிஸ், சிறுவர் உரிமை என்று சிக்கல் கொடுப்பினம். ஆனால் எனது தேவைகளைப் பூர்த்தி செய்வார்களா? இதைவிட பொலிஸ் வந்தால் அம்மா நொய் .. நொய் ....என்று அர்ச்சனை பண்ணுவா ... வேலைக்குப் போக இயலாது. இன்று காலை சாப்பிடவும் இல்லை சீ ..... சீ.. பள்ளி சென்றிருந்தாலும் ஒரு வேளை உணவு கிடைத்திருக்கும் எல்லாம் போச்சு, என் தலைவிதி என்று ஒரு மரக்குற்றியில் குந்தியிருந்தான் சாந்தன்.


மீண்டும் ஒரு யோசனை தோன்றியது. அயலில் உள்ள கோயிலுக்கு பல்வேறு சுற்றுலாப் பயணிகள் வருவதுண்டு. அதில் இருந்து வெள்ளைத்துண்டு ஒன்று விரித்து விட்டு இருந்தால் அவர்கள் விரும்பின பணத்தைப் போட்டி விடுவர். இல்லாவிட்டால் விட்டுவிடட்டும், என்று நினைத்து அப்படியே செய்தும் பார்த்தான்.

அவ்வழியே ஒரு பெரிய மனிதர் வந்தார். கோயிலை சுற்றிக் கும்பிட்டுவிட்டு கோயில் உண்டியலில் ஆயிரம் ரூபா போட்டார். அந்தக் கையோடு சாந்தனின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துண்டில் பத்து ரூபாய்க் குற்றி ஒன்றை ஏனோ. தானோ என்றவாறு விசிறிவிட்டுச் சென்ற செயல் சாந்தனுக்குச் சரியாகப் படவில்லை.

செருப்பால் அடித்தது போன்று இருந்தது. கடவுளால் கைவிடப்பட்ட மனிதனைப் போல் உணர்ந்தான். ஆகவே இனியும் அவமானம் வேண்டாம் என்று நினைத்து வீட்டிற்குப் புறப்பட்டான். சாந்தன்.

நேரம் இரண்டு மணியாகிறது. வீட்டில் யாருமில்லை அம்மாவும் அயலூரில் சமைத்துக் கொடுக்கப் போறவா ..... போயிருப்பா ..... என்றவாறு அடுப்பிலிருந்த பழங்கஞ்சியை சிரட்டையில் விட்டு வெங்காயம் போட்டுக் குடித்துவிட்டு சுவரோடு சாய்ந்திருந்தான். நிம்மதியாக நித்திரை வாட்டியது எழுந்திருக்க மாலை ஐந்து மணியாகிவிட்டது. அம்மா வந்தவுடன் சமைத்த உணவு உண்டு அன்றைய பொழுதும் கழிந்தது.

மறுநாள் காலை எழுந்து நேற்று எடுத்த இலட்சியக் கனவுகளை மனதில் நிறுத்தி வீறுநடை போட்டான். என்ன நடக்குமோ ..... ! ஏது நடக்குமோ ..... உடலில் தெம்பில்லை இருந்தாலும் பள்ளி நோக்கி வியர்க்க, விறுவிறுக்க நடந்தான். காலிலும் செருப்பில்லை கல்லுக் குத்தியது. சிறிது நேரத்தில் நின்று பார்த்தான் மரம் ஆடுவதைப் போல் உணர்ந்தான். குளிர்ந்த காற்று வீசியது மழைவரப் போகிறதோ ..... ? என்றவாறு மரத்தடியில் அமர்ந்து கொண்டான். அப்போது தான் தனது தலை சுற்றுவதை உணர்ந்தான். சுற்றி அண்ணார்ந்து பார்த்தபோது நீலவானமும் முகில் கூட்டமும் என்றும் ஓய்ந்ததில்லை தம் கடமையை சரிவரவே செய்கிறது. பறவைக் கூட்டங்கள் ஒன்றை ஒன்று பின்பற்றி நீண்ட வரிசையில் வானை அலங்கரித்தன.

இவ்வாறான காட்சிகள் இவனுடைய மனதை நெருடியது. ஒழுங்கும் விடாமுயற்சியும் நேர்மையும் என்றும் உதவும் என்று மீண்டும் கட்டியம் கூறி நினைவிற்கொண்டு பள்ளிக்குப் போக நினைத்து எழுந்து நடக்கத் தொடங்கினான்.

அதிஷ்ட தேவதை ஒருத்தி சாந்தன் போன பாதையில் காத்திருந்தாள். அது சாந்தனுக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை சாந்தனும் தொடர்ந்து நடந்து சென்றான்.


வெளிநாட்டிலிருந்து வந்தவர் பேச்சியம்மா என அழைக்கப்படும் பென்சனியர் ஒரு வருடத்திற்கு ஒரு முறை யாழ்ப்பாணத்துக்கு வந்து வீடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடகை கொடுத்து பத்திரங்கள் புதுப்பித்தல், பென்சன் எடுத்தல் போன்றன பேச்சி அம்மாவினுடைய வேலை.

அதுபோல அன்றும் பாடசாலை வழியாகச் செல்லும் பொழுது தன்னுடைய கைப்பையில் இருந்து இரண்டாயிரம் ரூபா காசும், கடவுச்சீட்டும், தேசிய அடையாள அட்டை மற்றும் முக்கியமான பெறுமதியானவைகள் தவறவிடப்பட்டு வீட்டில் போய்ப் பார்த்த பின்னர் அதே வழியில் தேடியும் கிடைக்கவில்லை. பொலிஸ் நிலையத்தில் அறிவிக்கத் தயாரான நிலையில் இருந்தார் பேச்சியம்மா, நேரம் எட்டு மணியாகியது. அன்று சம்பவம் நடந்தது ஆறு முப்பது மணி இருக்கும்.


பேச்சி அம்மாவின் பிள்ளைகள் இருவரும் கால ஓட்டத்தில் காணாமல் போயிருந்தனர். அந்தக் கவலையும்தான். வெளிநாட்டில் மச்சாளுடன் தங்குவதற்கு காரணமாக அமைந்தது. எதிர்காலத்தில் பார்ப்பதற்கு யாரும் இல்லை. ஆனால் பணத்திற்கு குறையே இருப்பதில்லை. இவ்வாறான சூழ்நிலையில்தான் இந்தப் பணப்பை காணாமல் போக அது அதிஷ்டவசமாக சாந்தனின் கையில் அகப்பட்டது. எவரின் கையில் கிடைத்திருந்தாலும் அது காணாமல் போயிருக்கும் என்பது சாதாரண நடைமுறை.

சாந்தன் எடுத்துக்கொண்ட பொருள் யாருடையது என்று வாசித்து அறியும் திறன் இவனிடம் இல்லை, இருப்பினும் பொது அறிவு மிகுதியாகவே இருந்தது. உள்ளே இருந்த தேசிய அடையாள அட்டையை பார்த்த போது அதில் உள்ள முகம் இவனுக்குப் பழக்கப்பட்டது.

பேச்சியம்மா வெளிநாட்டிலிருந்து வந்ததையும் சாந்தன் அறிந்திருந்தான். எனவே தன்னுடைய நேர்மைக்கு களங்கம் வரக்கூடாது என்றும் தன் கொள்கையில் இருந்து விலத்தினால் அந்தக் காசைக் கொண்டு ஒரு கிழமை சந்தோசமாக இருக்கலாம் என்று தெரிந்தும் இருந்தாலும் அந்தப் பொருளை உரிய பேச்சியம்மாவிடம் முறைப்படி ஒப்படைத்தான். தன்னால யாருக்கும் பிரயோசனம் இருக்கட்டுமே என்று நினைத்து .....

ஒப்படைத்த பொருளைப் பேச்சியம்மா ஒவ்வொன்றாக எடுத்துச் சரிபார்த்த பின் மீண்டும் மீண்டும் தன்னை உறுதி செய்து தன்னையும் சாந்தனையும் நம்பமுடியாமல் கனவா ..... ? நிஜமா ..... ? என்று விறைத்துப் போய்விட்டார். ஏனெனில் மகன் கூட தன் கைப்பையிலிருந்து காசு திருடி இனிப்புப் பண்டம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வேண்டிச் சாப்பிட்டு அடியும் வேண்டியது நினைவிற்கு வந்தது. சாந்தனின் முகம் தன் மகன் சிறியவனாக இருக்கும்போது உள்ளதை நினைவுபடுத்தியது. செய்த உதவிக்கு பரிகாரமாக சாந்தன் ..... .. வாய்விட்டு கேட்கிறன்.

நீ என் மகன் என்னோடு இருக்க வேண்டும் என்று கட்டி அணைத்து முத்தமிட்டு நீதான் எனக்கு கொள்ளி போட வேண்டும். உன்னை நான் படிக்க வைக்கிறேன்.

இனி வேண்டிய காசுகள் கொடுத்து அன்று அறுசுவை உணவும் பரிமாறி அவன் படித்த பள்ளிக்கு கூட்டிச் சென்று சாந்தன் செய்த நல்ல பண்பு கள் பற்றி எடுத்துக்கூறி அதிபரையும் ஆசிரியர்களையும் சந்தோசப்படுத்தி இந்தப் பண்பு வீட்டில் இருந்தோ அல்லது பாடசாலையில் இருந்தோ தான் இவனிடம் வளர்ந்திருக்க வேண்டும் என்ற படியாலும் பேச்சியம்மாவும் அந்தப் பள்ளியில்தான் படித்தவர் என்பதாலும் அதை உணர்ந்திருந்தார்.

அத்துடன் நிற்காது ஒரு வகையில் தூரத்தில் சாந்தனும் பேச்சியம்மாவுக்கு சொந்தமாக இருந்ததும் சாந்தனின் குடும்ப நிலவரம் நன்றாகத் தெரியும். அவனுக்கு இன்னும் ஒரு தம்பி படிக்கிறான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அந்த நம்பிக்கையில் இலட்சுமி அம்மா வீட்டிற்குச் சென்று இலட்சுமி உன் மகன் சாந்தன் மிகவும் நேர்மையான பிள்ளை. நான் தொலைத்த கைப்பையை எடுத்து என்னிடம் ஒப்படைத்துள்ளான் என்றதும் இலட்சுமிக்கு என் மகனா .....? என்று ஐயுறும் படியாக இருந்தது. பின்னர் நடந்த சம்பவங்களைப் பாராட்டிய பேச்சியம்மா ...... .. நீ இலட்சுமி தான் எதிர்காலத்தில் எனது சொத்துக்கள் யாவும் தருகிறேன்.

உன் மகன் சாந்தனை என்னுடன் இருந்து வளர ஒப்புக்கொள்ள வேண்டும் என்றார். அங்கிருந்தாலும் இங்கிருந்தாலும் ஒன்றுதானே என்று வைரவநாதர் அப்பாவும் ஏற்றுக்கொள்ளவே அன்றிலிருந்து சாந்தன் குடும்பமும் பேச்சியம்மாள் குடும்பமும் செல்வச் செழிப்போடும். சாந்தன் கல்வியிலும் உயர்ந்து விளங்கத் தொடங்கினான். இதனால் எல்லோருக்கும் இவன் பிரயோசனமானவனாகத் தோன்றினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித பக்திக்கு இரங்காத தெய்வமும் இல்லை
அவன் சக்திக்கு இயலாத காரியமும் இல்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


3

# கடவுள் ஏன் கல்லானார்

LDIT விட்டபுரத்தைச் சேர்ந்த வேலுப்பிள்ளை வாத்தியார் யா/வீமன்காமம் மகாவித்தியாலயத்தில் சமயபாடம் கற்பித்து இன்று ஓய்வு நிலையில் வீண் பொழுதை பயனுள்ள வகையில் அமைக்கும் பொருட்டும் ஆன்மீக ஈடேற்றத்தின் பொருட்டும் தனது வீட்டருகே உள்ள வேப்பமரத்தடியில் அமர்ந்துள்ள கல்லுப் பிள்ளையார் என்னும் பெயரால் பரம்பரை பரம்பரையாக அழைக்கப்படும் பிள்ளையாரை வணங்குவதும், சுற்றுப்புறங்களை தூய்மை செய்வதும், அமுது செய்து படைத்து சிறுவர்களுக்கு வழங்கி தினந்தோறும் காலை மாலைப் பொழுதை அமைதியான ஆன்மீகத்துடன், சந்தோசமாகவும் கழித்துக்கொண்டு இருந்தார்.

வேலுப்பிள்ளை ஐயா அவர்களுக்கு ஒரு பேரன் இருந்தான். அவன் பெயர் கதிர். சிறுவயதிலிருந்தே எதற்கும் எவர்க்கும் பயப்படமாட்டான். அவனுடைய இன்றைய வயது ஐந்து. “ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?” என்று பழமொழி கூறுவார்கள். ஐந்து வயதிற்கு மேல் உள்ள துடிப்பும் கேள்வி ஞானமும் கொண்டவன் கதிர். எப்போதும் சுட்டித்தனமாகவே இருப்பான், அதே நேரத்தில் நிதானமாகவும் இருப்பான். முகமோ சந்திரவதனம் ஒளி வீசுவது போல் இருப்பதால் இவன் மீது வேலுப்பிள்ளை வாத்தியார்க்கு கொள்ளைப் பிரியம் கொண்டிருந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கதிருக்கு முன் பிறந்து ஆறு மாதத்திலேயே இறந்து போன அண்ணன் கோபியின் இறப்புக்கு காரணம் உள்நாட்டு இடப் பெயர்வும், யுத்தமும்தான். ஒப்பறேசன் லிபறேசன் நடவடிக்கையில் (1987) அகப்பட்டுக் கொண்டார்கள்.

இவ்வாறான காரணங்களால் வேலுப்பிள்ளை வாத்தியாரும், கதிரும் பிரிந்திருக்க சிறிது நேரமும் சந்தர்ப்பம் கொடுப்பதில்லை. கதிரும் தாத்தா...! தாத்தா..! என்று பின்னால் வால் பிடித்துக்கொண்டே திரிவான்.


முன்னைய நாட்களைப் போலவே அன்றும் ஒரு வெள்ளிக்கிழமை தெய்வ வழிபாட்டிற்குரிய நல்ல நாளில் காலை நான்கு மணிக்கே வேலுப்பிள்ளை எழுந்து கடமைகளை எப்போதும் உள்ள மாதிரியே செய்து கொண்டிருந்தார்.

சாடையான பனிக்குளிரும், இலேசான காற்றும் இவருடைய பணியை மேலும் தொடர உற்சாகமாக இருந்தது. கதிரோ நித்திரையில் இருந்தான். அவனைத் தட்டி தம்பி கதிர் !..காலைக் கதிரவன் உன் காலைத் தொடுகிறான். இன்னும் சுடவில்லையா...? என்று கேட்டார். தாத்தா ..?! இல்லை தாத்தா. உங்கள் கேள்வி தான் சுடுகிறது. என்றான் கதிர். ஏன் குஞ்சு ? என்றார் வேலுப்பிள்ளை. பையனோ!! ஓம் தாத்தா ஒவ்வொரு நாளும் காலைக் கதிரவன் தன் கதிர்களால் தட்டி எழுப்புகிறான். எமக்கு விடிந்ததாக இல்லை. எமக்கு எப்ப விடியும்? என்றான். தாத்தா அதிர்ந்து போனார். ஒரு கணம் வாய் தடுமாறியது சிந்தனை மேல் எழுந்தது. சற்றும் எதிர்பாராத வகையில் காலையில் எழுந்து உடம்பு முறிக்கும் வயதில் என் உள்ளத்தை முறித்து விட்டானே என எண்ணிய மனதை சமாதானம் செய்து கொண்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தம்பி கதிர் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாமல் கதையை மாற்றி அப்பு தேநீர் ஊற்றி விட்டேன். எடுத்துக் குடியும். குடித்து விட்டு கல்லுப்பிள்ளையாரை வழிபாடு செய்ய கெதியாக வேலையெல்லாம் முடித்துவிட்டு வாரும் என்று அன்பாக அழைத்தார். வேலை சொன்னாலும் முகத்தில் ஒரு புன்முறுவல். கண்ணில் ஒரு கண்ணியம். கட்டுப்பாடு எப்போதுமே மேலோங்கி இருக்கும். இது வேலுப்பிள்ளை வாத்தியாருடைய இயல்பான ஆளுமையின் குறிகாட்டி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கதிரும் கடமைகள் முடித்து தேநீர் பருகி தாத்தா வேலுப்பிள்ளையுடன் கல்லுப்பிள்ளையாரை கும்பிடச் சென்றார்கள். வேலுப்பிள்ளை வாத்தியாரைப் பார்த்து கதிர்… தாத்தா…. தாத்தா? ஏன் பிள்ளையார் என்று சொல்கிறியள் கல்லுத்தானே கிடக்கிறது. இதை ஏன் நாம் குட்டிக் கும்பிட வேண்டும்…? வீட்டில் ஒரு பிள்ளையார் படம் இருக்கிறது. அதைக் கும்பிடலாம் தானே என்ன? தாத்தா… கல்லைப்பார்த்து பிள்ளையார் என்று காதில் பூ வைக்கிறீங்களா..? எனப்பல கேள்விகளைத் தொடுத்தான் கதிர். வேலுப்பிள்ளைக்கு கேட்ட கேள்வி எல்லாம் புதியனவாகத் தெரியவில்லை. கதிர் எதை எடுத்தாலும் கேள்வி கேட்காமலும், செய்யாமலும் விடமாட்டான்.

வேலுப்பிள்ளையும் பிள்ளையார் பற்றிய பூர்வீக கதையினை எடுத்துவிட ஆரம்பித்தார். சிறுவனோ தாத்தா புதிர் போடாமல் சுருக்கமாகச் சொல்லுங்கோ? எனக்கு எல்லாம் விளங்கும் என்று முன்கூட்டியே தர்ம அடிகொடுத்து விட்டு கண்ணால் கதைத்தான். ஏனெனில் தாத்தாவும் கதைக்கு உபகதை சொல்லி சுற்றி வளைத்து வந்து மூக்கைத் தொடுவது போல் கூறுவார்.

வேலுப்பிள்ளையும் சிறுவனின் புரிதலை இனங்கண்டு சுருக்கமாக, விளக்கமாக கூறத் தொடங்கினார். என்னுடைய அப்பா இப்போது உயிருடன் இல்லை அவர் பிறந்த இடம் பளை எனக் கூற அறிந்தேன். அங்கு ஒரு பிள்ளையார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கோயிலை ஆதரித்து வணங்கி வந்தாராம். பிற்காலத்தில் திருமணமாகி இந்த மண்ணுக்கு வந்தவுடன் இங்கே தோட்டம் செய்து நிலபுலத்துடன் வாழத் தொடங்கியதால் மீண்டும் பளைக்குப் போக முடியவில்லை. கவலையுடன் வாழ்ந்து வரும் நாளில் நான் பிறந்தேன். பிறந்து ஒன்பது வயது இருக்கும் வீடு கட்டுவதற்கு எடுத்த கல்லில் கட்டிவிட்டு மிஞ்சிய கல் ஒன்று கிடந்ததை கண்டெடுத்து இந்த வேப்ப மரத்தடியில் வைத்து அயல் வீட்டுப் பிள்ளைகளுடன் சேர்ந்து பூ வைத்து மாலை போட்டு கோயில் விளையாட்டு விளையாடினோம். அது முடிந்து யாவரும் கலைந்து தத் தம் வீட்டிற்குப் போய்விட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்று இரவு அப்பாவின் கனவில் தோன்றிய பளை ஊரைச் சேர்ந்த பிள்ளையார் "அப்பனே நீ என்னிடம் வர வேண்டும், வரமுடிய வில்லையே என மனங்கலங்காதே நான் உன்னிடம் தேடிவந்துள்ளேன். பார் வீட்டு முற்றத்தில் உள்ள வேப்ப மரத்தடியில் கல்லுப் பிள்ளையாராக வந்துள்ளேன்" எனக் கனவில் தோன்றி மறைந்தாராம்.. காலை எழுந்து அப்பா வேப்ப மரத்தடிக்கு ஓடிச் சென்று பார்த்து வியந்து இது கனவா...? நனவா...? என்று எல்லோரையும் அழைத்து வந்து அதிசயத்தைக் கூறினார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நான் சொன்னேன் அப்பா நாம்தான் விளையாட்டுக்கு கல்லு வைத்து, பூ வைத்து, மாலையும் போட்டு விளையாடினோம் என்றேன். அப்பாவும் என்னை கட்டியணைத்து தன்னுடைய உள்ளப் பூரிப்பை வெளிப்படுத்தினார். மன நிறைவடைந்தார். நான் தேடிப்போக வேண்டிய தெய்வம் என்னிடம் வந்துவிட்டது




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எனவும் எனது பிள்ளை மூலமாக வெளிப்பட்டுவிட்டது. என்றும் "குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று" என்பது பழமொழி போல அதற்கு அமைய நடந்துவிட்டதாகக் கருதி உடனே பொங்கல் வழிபாடு செய்தார். அப்பா அன்று தொட்டு இன்றுவரை அப்பாவுடன் நானும் இணைந்து வழித்தோன்றலாக இந்தப் பிள்ளையாரை வழிபாடு செய்து வருகிறோம் என விளக்கமாகக் கூறினார்.

இன்னும் நீர் நம்பவில்லையென்றால் தோட்டத்துக்குப் போன அப்பா இரவு வர பத்து மணி ஆகி இருக்கும் நாம் விளையாடி விட்டுப் போனவிடயம் அவருக்குத் தெரிந்திருக்க எச்சந்தர்ப்பமும் இல்லை. அத்துடன் அவருக்கு எப்படியும் பொய் சொல்ல வேண்டும் என்றோ அல்லது இதுவரையில் பொய், களவு என்ற வார்த்தைக்கும் இடமில்லை. அத்துடன் அவர் ஒரு விடயம் சொன்னால் சொன்னதுதான் பல தடவைகள் அலட்டிக்கொள்ள மாட்டார்.

இவ்வாறான இவருடைய நடை, உடை பாவனைகள் மூலம் நான் உணர்ந்து கொண்டேன் எனக் கூறிய நிலையில் ஒரு நாள் பொழுது போனது. அன்று வழிபாடுகள் பொங்கல் சிறப்பாக நடைபெற்று முடிந்தது. கதிரும் நித்திரைக்குச் சென்றான். ஆனால் நித்திரையோ வரவில்லை. கடும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யோசனையில் ஆழ்ந்து தனக்குத்தானே பல்வேறு வினாக்களைத் தொடுத்து விடைகாண முற்பட்டான். எனினும் முடியவில்லை. ஒரு கட்டத்தில் நித்திரையாகி மீண்டும் அதிகாலையிலேயே நான்கு மணிக்கு எழுந்துவிட்டான்.

திரும்பவும் கதிர் நேற்று நடந்த சம்பவத்தை தாத்தாவிடம் விளக்கம் கேட்க முனைந்தான். வேலுப்பிள்ளை வாத்தியாரும் கோவிலுக்குத் தேவையான பூக்களைப் பறித்துக்கொண்டு நின்றார். கதிரோ எப்படியாவது அவர் பக்கம் கதையைத் தொடுத்து என் வழிக்கு எடுக்க வேண்டுமென நினைத்து புத்திசாதுரியமாக வினாவத் தொடங்கினான். தாத்தா ஏன் சூரியன் வரமுன்னே பூக்களை கொய்துகொண்டு இருக்கிறீர்கள். என்றான்...?

ஆறுதலாகப் பிடுங்கலாம்தானே என்ற கதிரைப் பார்த்து கதிர்க்குட்டி நீர் சொல்வது சரிதான். ஆனால் காலையில் வண்டு தேன் குடித்து அசிங்கம் பண்ணிய பூவை சாமிக்கு வைக்கக்கூடாது. என்றதும் கதிர் உடனே. நான் நட்ட கல்லுக்கு பூவை வைக்கிறேன் என்றான். தாத்தா உடனே இல்லை! இல்லை. நான் என்பது ஆணவம் நாம் என்று சொல்லும் எனச் சொல்லி முடிப்பதற்குள் திரும்பவும் ஏன் என்றான்? அதற்குத் தாத்தா என்னுடைய அப்பாவின் வழித்தோன்றல் உன் தாத்தா பாரும் தாத்தாவின் மகன் உன் அப்பா. அப்பாவின் பிள்ளை நீர். ஆகவே அவர்கள் நட்டபடியினால்தான் இன்று நாம் இருக்கின்றோம். இது கடவுள் சித்தம் எப்போதும் கடவுள் நினைப்பதைத்தான். நாம் செய்துகொண்டிருக்கின்றோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எதையும் நீங்கள் முடிவாக செய்ய முடியாது. ஒவ்வொன்றையும் இயக்குவது கடவுள். நாம் ஒரு கருவியாகச் செயற்படுகிறோம். என்று விளக்கம் சொன்னார்.

கதிர் இன்னும் திருப்தி அடையாத நிலையில் தாத்தா என்னுடைய கண்ணுக்கு மரத்தடியில் உள்ள கல்லு கல்லாகத்தான் தெரிகிறது என்றான்..? சலிக்காத தாத்தா இல்லையப்பன்.

கல்லாகப் பார்த்தால் அது கல் பிள்ளையாராகப் பார்த்தால் அது பிள்ளையார். சிற்பி ஒரு கல்லையெடுத்து வைத்துவிட்டு இது பிள்ளையார் செய்ய அளவு உடையது. பொருத்தமானது என வைத்துக்கொண்டு இருக்க இடையில் வந்த மனைவியோ! மனுசன் கல்லைப் பார்த்து என்ன யோசனை செய்கிறது. என்று குழம்பி, ஏனப்பா என்ன செய்கிறியள் வேலையில்லையோ என்றாளாம்? சிற்பியும் இதில்தான் என்னுடைய பிள்ளையார் இருக்கிறார் என்றதும் அதிர்ந்து போன மனைவி உமக்கென்ன விசரே உம்மோட கதைத்தால் எனக்கு விசர்தான் வரும் என்று முணுமுணுத்துக் கொண்டு போய்விட்டார்.

மறுநாள் அந்த கல்லுக்குப் பதிலாக ஒரு பிள்ளையார் இருந்தாராம். மனைவி கேட்டார், எங்கப்பா நேற்றுக் கிடந்த கல்லு எங்கே? எப்ப இந்தப் பிள்ளையார் புதிதாக செய்ததா....? வேண்டியதா...? என்று சிற்பியும் அமைதியாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து சொன்னார் நேற்றுக் கிடந்த கல் உமக்கு கல்லாகத் தெரிந்தது. அது இன்று பிள்ளையாராக மாறிவிட்டது. என்றதும் மனைவியினுடைய மயக்கமும் தெளிந்ததாம் என்று வேலுப்பிள்ளை வாத்தியார் இன்னும் தொடர்ந்தார். "கல்லைக் கண்டால் நாயைக் காணோம்" என்று பழமொழி கூறுவார்கள். நாயைக் கண்டவுடன் கல்லெடுத்து எறிய நினைத்தால் கல் அந்தச் சந்தர்ப்பத்தில் இருக்காது. கல்லிருக்கும் போது நாய் அங்கு இருப்பதில்லை என்பதாகச் பெரியோர் அர்த்தம் கூறுவதும் உண்டு.

இதனை விட உண்மையான ஆன்மீக தத்துவம் வேறுபடுகிறது. ஒரு கல்லை உயிருள்ள நாயாகவும் பார்க்க முடியும். தொட்டால் உணர்வற்ற கல்லா கவும் பார்க்க முடியும் எனவே நாம் பார்க்கும் பார்வையில் தான் தங்கியுள்ளது என விளக்கம் கூறினார்.

விளக்கம் போதாமல் மேலும் கதிர் தாத்தா கல்லாகக் கடவுள் இருக்கிறார் என்கிறீர்கள். அவர் எப்போது கல்லாக மாறினார். என்றான்? இவ்வாறான கடும் வினாக்கள் தொடுத்து தாத்தாவை திணறடித்து ஆன்மீகத் தேடலில் ஈடுபட்டான்.

தாத்தா எதற்கும் சளைத்தவர் அல்ல. ஒரு நிறைவான விளக்கம் பிள்ளைக்குச் சொல்ல வேண்டும் என்று சிறிது நேரம் அமைதியாகி விடையினைக் கூறத் தொடங்கினார்.

இறைவனுடைய வடிவங்கள் அருவம், உருவம், அருவுருவம் என மூன்றாக உள்ளது. அருவம் என்பது சிவம், சக்தி, நாதம், விந்து எனப் பெயராக கற்பனையில் வழிபாடு செய்வது.

உருவமென்பது கற்பனையளவில் உள்ள பெயர்களுக்கு சிலை வடிவம் கொடுத்து அதனூடாக வழிபாடு செய்வது.

அருவுருவம் என்பது சிவமும் சக்தியும் இணைந்த குறியீடாக அமைத்து வழிபாடு செய்வது. இவற்றுக்கு உதாரணமாக சிவலிங்கத்தை குறிப்பிடலாம். மேலும் கல்லாக இருக்கும் இந்த கல்லுப் பிள்ளையார் சிலையாக இன்னும் வடிக்கவில்லை அது ஒரு குறியீடு உமக்கும் எனக்கும் மட்டும் அல்லது இந்தக் குடும்பத்திற்கு மட்டும் தான் தெரியும் அது கல் அல்ல பிள்ளையார் என்று வேறு யாரும் பார்த்தால் அது கல்லாக மட்டுமே தெரியும். இது நம்பிக்கைக்குரிய விடயம் தன் நம்பிக்கை இல்லாதவன். இந்த மண்ணில் உயிர் வாழ முடியாது. கலங்கியே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுவான் குழம்புவான் இவ்வுலகில் இன்பமாக வாழமுடியாது. துன்பமாக இருந்து தானும் குழம்பி தன்னைச் சேர்ந்தோரையும் குழப்புவான்.


விண்வெளியிலிருந்து பார்த்தால் இப்பூமி அந்தரத்தில் நிற்பது போல் தெரியும். ஒரு சந்தர்ப்பத்தில் பூமி இன்னொரு கோளுடன் ஈர்ப்பு விசை காரணமாக ஈர்க்கப்பட்டு. மோதுண்டு. புவி உடைந்து. உலகம் அழிந்தால் என்று நினைத்தால் ஒரு கணமும் உயிர் வாழ முடியுமோ..? என நினைத்தால் நித்திரையும் வராது என்றும் விடையைத் தொடர்ந்தார்.

மேலும் எங்கும் எதிலும் நிறைந்த கடவுள் எல்லாவற்றிலும் கடந்தும் இருந்தும் இயக்கும் சக்தியாக இருந்து இயக்கி நல்லதையும். கெட்டதையும் இங்கேயே சொல்லக்கூடியவர்களையும் படைத்துள்ளார்.

கடவுள் ஏன் கல்லாக இருக்கிறார் என்றால் கல்லாய்ப் போன மனிதர் களால்தான் ஈன இரக்கமற்ற செயல்களும். கொடுமைகளும் பல்கிப் பெருகி காணப்படுகிறது. கோயில் நகையை கொள்ளையிட்டு விட்டு கோயிலுக்கே நேர்த்தி வைத்து கடன் தீர்ப்பவர்களாக எம்மவர்கள் இருப்பதால் கடவுள் நேரடியாக வந்தால் யாருக்காக தீர்ப்புச் சொல்வது? எனவேதான். மறைமுகமாக நின்று இயக்குபவராகக் காணப்படுகின்றார். என விளக்கினார். தாத்தா. கதிரும் பூரண விளக்கம் பெற்று எதிர்காலத்தில் சிறந்த பிரஜையாக வாழ வேண்டும் என்ற எண்ணத்தை வளர்த்துக்கொண்டான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வெற்றிக்கு முதற்படி நேர்வழியில் போட்டியில் பங்குபெறல் மூலம் தோல்வியடைதல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4 விளையாட்டுப்போட்டி

அதிகாலைப்பொழுதில் கதிரவன் கூட துயில் எழவில்லை. விமானம் ஒன்று கடும் இரைச்சலோடு விரைந்து செல்ல அந்தச் சத்தத்தில் திடுக்கிட்டு எழுந்தவன் தான் மலரவன்.

எழுந்த மாத்திரத்தில் மணியென்னவாக இருக்கும் என்று சுற்றுமுற்றும் பார்த்தால் ஒன்றும் புரியவில்லை. வாழ்க்கையே புரியாதபோது, கசகச என்ற இருட்டில் மணி எப்படித் தெரியும்?


படுத்திருந்தவாறே மலரவன் பார்வையில் வீட்டின் கூரை வழியாக வெள்ளிகள் தெரிந்தது. அதிலிருந்து புரிந்தது வெள்ளி பார்ப்பதுதான் எமது வாழ்க்கையென்று.

அப்பா வீடு வேயவென்று முகட்டைக் கழட்டிவிட்டு திரும்ப வேய்வதற்கு ஓலையும் இல்லை காசும் இல்லை. வவுனியா வியாபாரத்திற்குச் சென்றவர் பாதை பூட்டியதால் இன்னும் திரும்பவில்லை. I.C.R.C யின் வேண்டுதலின் பேரில் ஆறு மாதத்திற்குப்பிறகு இப்பதான் காலம் பிறந் திருக்கு அப்பா இன்று வெளிக்கிட்டால் நாளைதான் வந்து சேருவார் என்ற நினைவுகளோடு மலரவன்.

வால்க்கட்டையில் சுற்றிய சைக்கிள் கம்பியினால் வளைத்து முறுக்கி பானா வடிவில் மடக்கி எடுத்து ஜாம் போத்தலில் விட்டுள்ள காஸத்துக்குப்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருத்தமான விளக்கு. வால்கட்டையின் நடுப்பகுதியால் செல்லும் திரியின் நுனியில் எரியும் வெளிச்சம் இன்று எல்.ஈ.டி பல்ப்பின் வெளிச்சத்துக்குப் பொருத்தமானதாக இருக்கும். நயிற் விளக்கையும் மிஞ்சிவிடும் அந்த அளவிற்கு தமிழ் விஞ்ஞானிகளால் மிகவும் நுணுக்கமாக தயார் செய்யப்பட்ட விளக்கின் மகிமை பஞ்சு வைத்து உப்புப்போட்டு கால்போத்தல் பாதியிலும் பாதி மண்ணெண்ணெய் விட்டால் போதும் இரவு ஏழு, எட்டு மணிக்கெல்லாம் கொழுத்திவிட விடியவிடிய எரியும் அந்த விளக்கைப்பார்த்து இம் ...... இப்ப நான்கு, ஐந்து மணி இருக்கும் என்று ஊகித்துக்கொண்டு எழுந்து பல் துலக்க ஆரம்பித்தான் மலரவன்.

மாகாணமட்ட விளையாட்டுப்போட்டிக்கு வவுனியா செல்ல வேண்டி யிருந்தது. இப்போது போல் இல்லை மூன்று மணித்தியாலத்தில் வவுனியாவில் நிற்க முடியும் என்று நினைத்துப்பார்க்க முடியாது. ஒருநாள், இரண்டு நாட்கள் பயணமாகியே உரிய இடத்துக்கு போய்ச் சேரமுடியும். மாணவர்கள் என்றால் ஓரளவு அனுமதி எடுப்பதில் சிக்கல்கள் குறைவு. தங்குமிடம், சாப்பாடு, போக்கு வரத்து, நீண்ட வரிசை எல்லாமே பொதுவிதிதான்.

பல்லுத்தீட்டிக்கொண்டு இருக்கும்போதே பல்வேறு சிந்தனைகள் தோன்றி மறையும். எல்லாக் கஷ்டங்களையும் தாங்கத்தான் வேண்டும். நேரதொடுகின்ற மூக்கை தலை சுற்றிவந்து தொடுவது என்றும், நனைத்துச் சுமக்கிற என்றும் மூத்தோர் அர்த்தம் கூறுவர். அவைகள் இன்று ஞாபகத்திற்கு வந்தது. பாலிநகரில் வான் புறப்பட்டால் மாங்குளம், கனகராயன்குளம் வீதியால் சென்று தாண்டிக்குளம் வவுனியா சென்றுவிடலாம். ஆனால் தலை எழுத்து ஓமந்தையில் இராணுவம் முன்னோக்கி நகரும் சண்டையால் இப்போது மன்னார் மடுப்பாதையூடாகத்தான் பயணம் செல்ல வேண்டிய நிலை உள்ளது.

மலரவனுக்கு வலயமட்டத்தில் முதலாம் இடம் கிடைத்தது. நூறு மீற்றரை விரைவாக ஓடிக்கடந்ததால் அது ஒரு வகையில் சந்தோஷம். ஆனால், பின்னால் உள்ள துக்கங்களை யோசிக்கும் போது சிக்கலாகத்தான் இருக்கும். சந்தர்ப்பத்தையும் விடக்கூடாது. மாகாணமட்ட சான்றுகள் இருந்தால் பல்கலைக்கழக அனுமதிக்கு உதவியாக இருக்கும் என்று கதைக்கினம். சோதனையைச் சாதனையாக்கினால்தான் கல்வியில் முன்னேறி வாழ்வை வளப்படுத்தலாம் என்று அன்றைய வேலைகள் எல்லாம் முடித்துக்கொண்டிருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாவைக் கஷ்ரப்படுத்தக்கூடாதென்று தானே தேநீர் கலந்து குடித்தான். மலரவன் பின்னர் அம்மாவை தட்டி எழுப்பி பயண விடயங்களை கவனிக்கச் செய்தான்.

விளையாட்டுப்போட்டிக்குச் செல்வதற்காக தேவையான பணத்தை திரட்டுவதற்கு அம்மாவிடம் இருந்தது ஒரே ஒரு காப்பு மட்டும் தான் அதையும் வைப்பகத்தில் அடைவு வைக்கச்சென்று இரண்டாம் நாள்தான் அடைவுக்காசும் கிடைத்தது. அவ்வளவு சனம். நீண்ட வரிசையில் நின்று நம்பர் எடுத்து காலை மதிய உணவுகள் கூட எடுக்காமல் எனக்காக அம்மா பட்ட வேதனைகள். பரவாயில்லை. ஒரேயொரு காப்பை அடைவு வைக்காமல் இருக்க பல வழி களிலும் போராடியதுதான் சொல்லமுடியாத வேதனை. சித்தப்பா, பெரியப்பா, மாமா, அயல்வீட்டுக்காரர் என்றெல்லாம், அலைந்தும் எந்தக்காசையும் திரட்ட முடியவில்லை. அன்றைய சூழலில் மனிதா விமானம் பற்றி எவரும் எவருடனும் கதைக்க முடியாது. அவ்வளவு வறுமை. இருபது ரூபா காசு கூட கைமாற முடியாத நிலைமை.

பொதுவாக எவரைப்பார்த்தாலும் மூக்கும் முழியுமாகத்தான் திரிவார்கள். கோபத்தில் அல்ல. அன்றைய காட்சிகள். காலை உணவும் மாலை உணவும் ஒறுத்து ஒரு நேரமாகத்தான் பெரும்பாலும் பலரது குடும்ப வாழ்க்கை சென்றது. வீடு இல்லை. தொழில் இல்லை. கணிப்புக்கு மாதம் ஒரு சண்டை வரும். பூனை குட்டி காவியது போல் இடப்பெயர்வு இவற்றையெல்லாம் தாண்டி எலும்பும் தோலுமாக உயிர் மட்டும் மிஞ்சி இருப்பதே அதிஷ்டம்.

எனவே மலரவன் யாருக்கும் கஷ்டம் கொடுக்க விரும்பவில்லை. இவன் மட்டுமல்ல அன்றைய சூழலில் வாழ்ந்த எல்லா மாணவர்களும் கடமையும் பொறுப்பும் மிக்கவர்களாக வாழப்பழகிக்கொண்டார்கள்.

சரி அம்மா, தம்பி, அக்கா எல்லாருக்கும் போட்டு வாறன் என்று சொல்லி விடைபெற்றான் மலரவன். அம்மா உடனே தம்பி போற வழியில பிள்ளையாரைக் கும்பிட்டுவிட்டுப் போ, பார்த்துப்போ, கவனமாகப்போ என்று முன்னுக்கு பின்னுக்கு முணுமுணுத்தவாறே சேர்ந்து நடந்து வந்து கொண்டிருந்தார். தனிய விட மனமில்லாமல் ஆசிரியர்கள் வருவினம். அம்மா நீங்கள் ஒன்றும் யோசிக்க வேண்டாம் நான் போட்டுவாறன் என்று மலரவன் வானில் ஏறிப்புறப்பட்டான்.

வானில் ஏறி உட்கார்ந்து கொண்டு நிம்மதியாக பயணம் செய்ய முடியவில்லை. ஒரே சிந்தனைகள். யாரோடாவது கதைத்து கைதட்டி சிரித்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயணம் போகிறோம் என்று சந்தோஷப்பட முடியவில்லை. விளையாட்டுக்குச் செல்கிறோமோ? அல்லது நரகத்திற்குச் செல்கிறோமோ என்று இனம்புரியாத வேதனையுடன் பயணம் தொடர்ந்தது. எவருடைய முகத்திலும் ஈ கூட ஆடுவது இல்லை. அடைத்து நெரித்து ஏற்றிய வாகனம் சோதனைச் சாவடிகளில் மட்டும் நிற்கும். வேறு அவசரம் என்றாலும் நிற்காது.

விடிய வெளிக்கிட்ட வாகனம் பின்னேரம் மூன்று மணிக்கு சோத னைச்சாவடியில் நின்றது. நீண்ட வரிசையில் மக்கள் கூட்டம். இருமருங்கிலும் முட்கம்பி வேலிகள். ஓர் ஆள் தனது கைப்பையை எடுத்துக் கொண்டு நடுப்பகுதியால் நடக்கவேண்டும். திரும்பினாலும் கம்பிகள் பதம் பார்க்கும். திருதிருவென்ற விழியோடு முதன்முதலாக வவுனியா செல்லும் அனுபவம். இடம் எதுவும் தெரியாது. சொல்லுமிடத்தில் நிற்கவேண்டியதுதான் என்று நினைத்தவாறு நடந்த மலரவனுக்கு பதினைந்து வயது மட்டும்தான் இருக்கும். மிகவும் கூச்ச சுபாவம் உடையவன். வாழ்க்கையில் ஒரு நாளும் வேறு இடங்களில் தங்கி வாழ்நாளை கழித்தது கிடையாது.


நீண்ட வரிசையாக நடந்த மலரவனுக்கு வெய்யில் கொழுத்தியதால் வியர்த்து களைத்து ஏலாது இருந்தான். அடுத்த சோதனை இவனுக்குத்தான். முதல் நின்றவர் அடைக்கப்பட்ட அறைக்குள் சென்றுவிட்டார். இனி தயாராக வேண்டும் என்று மனதை திடப்படுத்திக்கொண்டு நின்றான். ஆண்களுக்கு வேறு பெண்களுக்கு வேறு பிரிவாக சோதனை இடம்பெற்றது.

அருகில் நின்ற படைச்சிப்பாய் ஒருவர் மல்லி யன்ன என்று ஒரு சத்தம் இட்டது தெரிந்தது. மலரவனுக்கு சிங்களம் புரியவில்லை. கை அசைத்து என்ன என்று கேட்பதற்குள் அடைக்கப்பட்ட கூண்டில் நின்று சோதனை செய்த ஆமிக்காரன் மூடியிருந்த திரையை எடுத்துவிட்டு கை அசைத்து வா என்று காட்டியது தெரியவே உள்ளே நுழைந்தான் மலரவன்.

முதலாவது பொடி செங்கிங் என்று சொல்வார்கள். அதுதான் அங்கு நடந்தது. நின்ற ஆமி கைகளை உயர்த்தச் சொல்லி கைகள், கொலர், நெஞ்சு, இடுப்பு, முன்பக்கம், பின்பக்கம் என தடவிக்கொண்டு வந்தான். மலரவனுக்கு இவைகள் பழக்கப்பட்ட விடயம் அல்ல. அவ்வாறே காற்சட்டைப்பகுதிகள் பொக்கேற் என்பவற்றில் கையால் தடவிச் சோதனை செய்யும்போது மலரவனுக்கு அசௌகரியத்தைக் கொடுத்தது. இவன் படிக்கும் சூழல் மிகவும் இறுக்கமானதாகவும் கட்டுப்பாடானதாகவும் இருந்தது. ஏன் இப்பவும் கூட சொந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அனுமதி இன்றி ஒருவரை ஒருவர் தொடுவது மனித உரிமை மீறலாக இருக்கிறது. ஆனால் அன்றைய சூழலில் அது சாதாரணமாக இருக்கிறது. மலரவனும் சரி என்று இது முதல் அனுபவமாக ஏற்றுக்கொண்டான்.

அடுத்து எல்லாம் முடிந்து வேறு ஒரு முகாமில் பெயரும் தெரியாது இடமும் தெரியாது கொண்டுபோய் அடைத்தார்கள். சரி என்று தங்கினால் அடுத்தநாள் புகைப்படம் எடுத்தல், விசாரணைகள் என நடந்தது.

இந்த சோதனையில் எல்லாம் பாஸ் பண்ணக்கூடியதாக இருந்தது மாணவன் என்ற காரணத்தினால் மட்டுமே. எல்லாம் முடிந்து வவுனியா மத்திய கல்லூரி மைதானத்தில் அடுத்தநாள் மாகாணமட்ட விளையாட்டுவிழா ஆரம்பமாக இருந்தது. நேற்றைய களைப்புக்கு குளித்து சாப்பிட்டுவிட்டு, நல்ல ஓய்வும் எடுத்துவிட்டு, விளையாட்டுப்போட்டிக்கு தயாரான மலரவன் காலையே புறப்பட்டான் ஆசிரியர்களுடன். அவர்களின் வழிகாட்டலில் நன்றாக ஓடிப்பழகி ஒரு இடம் எடுத்துவிட முடியும் என்ற நம்பிக்கையில் பல கனவுகள் எல்லாம் தாண்டி நடந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டுப்போட்டி ஆரம்பமாகி விட்டது. முதலாவது நூறு மீற்றர் ஓட்டம். தயார் நிலையில் நிற்கப் பணிக்கப்பட்டது. மைதானத்தின் அருகில் பல மாணவர்கள் ஓடுவதற்கான பயிற்சி செய்து கொண்டு இருந்தனர். மலரவன் பார்த்தால் எல்லோரும் கால்களில் பைட்ஸ் என்னும் முள்ளுச்சப்பாத்து அணிந்து இருந்தனர். இவனுக்கு இவைகள் பழக்கப்பட்டது இல்லை. அருகில் நின்ற ஆசிரியரிடம் மலரவன். சேர் இவர்களுடைய முள்ளுச்சப்பாத்து என்காலில் பட்டால் என்னவாகும் என்று கேட்டான். சேர்..இல்லை அப்பன் அந்த அந்த றக்கில் ஓடினால் ஒன்றும் நடக்காது என்றார்.

சரி என்று நெஞ்சு படபடக்க நடந்த மலரவன் காலில் செருப்புடன் நடந்தவன் அறிவித்தலுக்கமைய ஆரம்ப ஸ்தானத்துக்கு விரைந்தான்.

இலக்கங்கள் வாசிக்கப்பட்டு நேராக நிற்க விடப்பட்ட நிலையில் ஓட்ட வீரர்களுடன் மலரவனும் ஒரு சுண்டெலியாக நின்றுகொண்டு இருந்தான். எல்லா மாணவர்களும் உயர்ந்து வளர்ந்த மலைகள் போல் இவனுடைய எண்ணத்தில் மட்டுமல்ல காட்சியிலும் தெரிந்தது.


ஒன் யுவர் மார்க் செற் என்பது இவனுக்கு பழக்கப்பட்ட விடயம். ஆகவே ஆயத்தமாக நின்றான் மலரவன். செற் சொல்ல சற்று எழும்பி அடுத்த கட்டளையில் ஓட வேண்டும் ஆயத்தமானவனுக்கு நெஞ்சில் படக்படக் என்று இருதயம் அடிக்கும் சத்தம் கேட்டது.

அடுத்த கணமே ஒரு துவக்குச் சூட்டுச் சத்தம் இவன் காதில் கேட்டது. மலரவன் என்ன செய்வதென்று அறியாது டக் என்று விழுந்து படுத்துவிட்டான். பக்கத்தில் நின்ற ஓட்ட வீரர்கள் ஓடி முடித்துவிட்டு வருவதற்குள் மலரவன் திரும்பி சுற்றும்முற்றும் பார்த்தான். எவரும் தன்னை கணக்கெடுக்கவில்லை என்பது தெரிந்தது.

கூட்டிச்சென்ற ஆசிரியர் ஓடிவந்து தலையைத் தடவி மலரவன் ஏன் அப்பன் படுத்தனீங்கள். இங்கு கோ என்று ஓடுவதற்குரிய கட்டளைக்கு துவக்குச் சுடுவது தான் பழக்கம் தெரியாதோ!. இப்பதான் எங்களுக்கும் தெரியும். சரி சரி நடந்துமுடிந்து விட்டது என்று சமாதானம் செய்து கொள்ள மலரவனுக்கு இனம்புரியாத கவலையுடன் கண்ணீர் கொட்டியது.

பூனைக்கு விளையாட்டு சுண்டெலிக்கு சீவன் போகுது என்று மனம் வருந்திய மலரவன் வெடிச்சத்தம் கேட்டால் எமக்கு அனுபவம் தற்காப்புக்கு விழுந்துபடுப்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானே. இது பள்ளியில் சொல்லித்தந்தது. சரி நான் பிழைவிடவில்லை என்றவாறே அனுபவங்கள் தந்த வெற்றியுடன் மீண்டும் வன்னி மண் வாசனையை நினைத்தவாறே ஓட்டப்போட்டியின் அடுத்த வெற்றிக்காக தொடர்ந்து நடந்தான்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்

சிறுகதை

கந்தன் எப்பவுமே ஒரு சாந்தமான குண சுபாவம் கொண்ட இயல்புடையவனாக இருந்தான். கந்தபுரம் என்ற சிறந்த கிராமத்தில் உள்ள பாடசாலையில் தரம் ஒன்பது மட்டுமே இருந்தது. இருந்தாலும் அந்தப் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் எல்லோருமே சிறந்த தொடர்பு மிக்கவர்களாகவும் உயர்ந்த எண்ணம் கொண்டு இக்கிராமத்தை வளர்ப்பதில் ஆர்வம் கொண்டு உழைத்தனர். இதனால் கந்தனும் சிறப்பாகக் கற்று வந்தான்.

அன்று காலை கந்தனும் வழமையே எழுந்து வழமை போல பாடசாலைக்குச் சென்றான். போகும் வழியில் இரண்டு பக்கமும் காடு போல வளர்ந்த முட்புதர்களும், செடிகளும் வளர்ந்து அடர்ந்து பார்க்க ஆனந்தமாக இருக்கும். ஆனால் மின்பக்கம் ஆட்களற்ற நடமாட்டம் இல்லாத பகுதியில் இனந்தெரியாதவர்கள் நடமாடுவது வழமை.

கந்தன் இவை தொடர்பாக அதிகம் அலட்டிக்கொள்வதில்லை. தனியாக பாடிக்கொண்டு நடந்து வருவான். காலில் பட்ட கல்லை எடுத்து எறிவான். பொழுது போக்காக எறிந்து எறிந்து வருவதால் கந்தனுக்கு எறிவதில் நிகர் எவரும் இருக்க முடியாது. வரும் வழியில் உள்ள மாங்காய், தேங்காய் என எறிந்து விழுத்திச் சாப்பிடுவதில் வல்லமை மிக்கவனாக இருந்தான். இவனுடைய நண்பர்களும் அதிசயிக்கவே செய்தது. ஏனெனில் சுயநலத்திற்காக கந்தன் போகும் வழியில் ஏதாவது சாப்பிடலாம். அவன் எறிந்து விழுத்தி பிடுங்கித் தருவான் என்று நண்பர்கள் நம்பினர்.

தரம் எட்டில் கல்வி பயிலும் கந்தனுக்கு வகுப்பாசிரியர் வேந்தன் அவர்கள் கற்றாடல் பாடம் கற்பிப்பவர். கந்தனுக்கும் ஆசிரியரில் நல்ல விருப்பம். ஆசிரியரும் அப்படியே. எல்லா மாணவர்களுடனும் தொடர்பைப் பேணியவர். வகுப்பில் நல்ல சிந்தனைகள் வழங்கித்தான் ஒவ்வொரு நாளும் பாடம் தொடங்குவார் ஆசிரியர். அதே போல் அன்றும் சூழலில் உள்ள கற்களைப் பொறுக்கி அதற்கு என்று ஒரு இடம் அமைத்து சேர்த்து வந்தால் அதனை தேவைக்குப் பயன்படுத்தலாம் என்று அறிவுரை சொன்னார்.

கந்தன் உடனே எழுந்து கல்லை என்ன சேர் தேவைக்கு பயன்படுத்த முடியும்? என்று வினவ ஆசிரியரும் நான் விடை சொல்வதிலும் விட ஒவ்வொரு மாணவரும் எழுந்து கல்லின் பிரயோசனம் பற்றிக் கூறுமாறு பணித்தார். ஒவ்வொரு மாணவர்களும் தங்களுக்குத் தெரிந்த மட்டில் எழுந்து வீடு கட்ட, மதில் கட்ட, கோயில் கட்ட என்று சொல்லிக் கொண்டே இருந்தனர். கந்தனின் முறை வந்தது. எழுந்தான் சுற்றும்முற்றும் பார்த்தான் "சேர்! உண்மைச் சொன்னால் நக்கல் பண்ண மாட்டீங்கள் என நான் சொல்கிறேன் இல்லையென்றால் விட்டுவிடுங்கள்" என்றான். கந்தனை ஆசிரியரும் விடவில்லை. "பதில் போடாமல் உண்மையைச் சொல்லு. நீ இங்கே 'கல்' கற்க வந்திருக்கிறாய். உன்னை யாரும் நக்கல் பண்ண முடியாது. அப்படி உன்னை மீறி நக்கல் செய்தால் அவர்களுக்கு நாளை சரியான பாடம் புகட்டுவேன் என்னை நம்பி இங்கே சொல்லும் பார்க்கலாம்" என்று அன்பாக நிதானமாகக் கேட்டார் ஆசிரியர்.

கந்தன் சொன்னான். "எனது காலை உணவையும் சிலவேளை மதிய உணவையும் இந்த வீதியின் உள்ள கற்கள் தான் பெற்றுத் தருகிறது" என்றான். இடையில் குறுக்கிட்ட மாணவரில் ஒருவர் எழுந்து கந்தனின் அப்பா கல்லுடைக்கின்ற வேலைக்குப் போறவர் போல என்றதும் ஆசிரியர் குறுக்கிட்டு அப்பா அம்மாவின் தொழில் சம்பந்தமாக தேவையில்லாமல் யாரும் கதைக்கக் கூடாது என்று ஒரு எச்சரிக்கையில் பல கதை சொன்னார். உடன் வாய்படைத்த மாணவன் பயத்தில் இருந்தான்.



கந்தன் சிறிய அமைதியின் பின் தொடர்ந்தான். "சேர் நான் காலை உணவு வீட்டில் சாப்பிடுவது இல்லை. அப்பா வேலை பட்டு இரண்டு நாளும் இல்லை. அவர் வேலைக்கு போறது இல்லை. அம்மா தான் தோட்ட வேலைக்கு காலையிலேயே போயவிடுவார்.

பின்னேரம் நான்கு மணிக்குப் பிறகு தான் வருவார்கள். சமையல் செய்வார்கள் ஒரேயடியாக இரவு மட்டும் தான் ஒரு நேரமாகச் சாப்பிடுவோம். எனது சிநேகிதர்கள் சொல்லுவினம், தாங்கள் மூன்று நேரம் சாப்பிடுவதாக. எனக்குப் பசியாக இருந்தால் வீதியில் வரும் போது, நாவற்பழம், அன்னமுன்னாப் பழம், ஈச்சம்பழம், இலந்தைப்பழம், கொப்பறாத் தேங்காய் போன்றவற்றை கண்டால் எடுத்துச் சாப்பிடுவேன். இல்லாத பட்சத்தில் தெருவோரமாக உள்ள மரங்களில் தேங்காய், மாங்காய்களைக் கண்டால் கல்லால் அடித்து விழுத்திச் சாப்பிடுவேன். நண்பர்களுக்கும் கொடுப்பேன்" என்று கதை சொல்ல எல்லா மாணவர்களும் விறைத்துப்போய் இருப்பினம் என்று ஆசிரியர் நினைத்தார்.

ஆசிரியர் தன் நிலையை சுதாகரித்துக் கொண்டு கதை ஒருபக்கம் போகாமல் மாணவனை பாராட்டும் நோக்கில் ஒரு போட்டி வைக்க நினைத்தார். உடனே "போட்டி ஒன்று வைக்கப் போகிறேன். அதில் பங்கு பெறும் மாணவர்கள் எல்லோரும் வெளியே வாருங்கள்" என்று கூறவே மாணவர்களுக்கு போட்டி, பரிசு என்றால் நிறைய விருப்பம் ஆகவே உடனே வரிசையாக எழுந்து வந்து நின்று கொண்டு "சேர் நேரம் போகுது சேர். நேரம் போகுது சேர் போட்டியைச் சொல்லுங்கோ" என்று கெஞ்ச தொடங்கினர்.

ஆசிரியர் சோக் ஒன்றை எடுத்துச் சென்று ஒரு மரத்தடியில் நின்று நடுப் பகுதியில் ஒரு வட்டம் போட்டார். பின் உள்வட்டம், வெளிவட்டம், மையப்புள்ளி எனப்பெயர் வரைந்து குறித்து விட்டு ஒரு கல் எடுத்துக் கொண்டார். கையடக்கமான அளவாக அமைந்த கல்லைத் தேர்ந்து அதனை வரிசையில் நிற்கும் மாணவர்கள் எடுத்து ஒவ்வொரு மாணவரும் ஒரு எறி எறிதல் வேண்டும். அது மரத்தில் வரைந்த மையத்தில் விழுந்தால் முதலாம் இடம், என அறிவித்தார்.

மாணவர்களும் ஆர்வத்துடன் போட்டியில் பங்கு கொண்டனர். கந்தனும் நிறை வரிசையில் நின்று அடுத்த அடுத்த வரிசைக்கு பின்வாங்கிக் கொண்டு இருந்ததை ஆசிரியர் அவதானித்தார்.

இருந்தும் கண்டும் காணாதது போல் நடந்து கொண்டார். ஆயினும் எப்படிப் பின்னுக்குப் போனாலும் இறுதியில் முதலாவதாக கந்தன் எறியும் முறை வந்தே தீரும் என்பது ஆசிரியருக்குத் தெரியும். எனவே பொறுமையாக இருந்தார். எல்லா மாணவர்களும் எறிந்து எல்லாம் வெளியில் பட்டது. போட்டியில் இரண்டாம் மூன்றாம் வட்டங்களில் பட்டு இரு மாணவர்கள் தெரிவாகி இருந்தனர். அவர்களுக்கு சற்றுத் தலைக்கனம் அதிகரித்தது. கேலி செய்தனர். ஏதோ கல்லெடுத்து எறிந்து சாப்பிடுறவராம் இப்ப பின்பக்கம் போறார் என்று நகைச்சுவையாக சிரித்துக் கொண்டனர்.

அந்தக்கணமே கந்தனுடைய சந்தர்ப்பம் வரவே கந்தன் கல்லை எடுத்து குறிபார்த்து எறிந்த எறியில் ஆசிரியர் வைத்த மையப் புள்ளியில் பட்டு அந்த மரத்துடன் ஏறி உடைபட்டு நின்று கொண்டது கல். ஆசிரியர் மாணவனை கந்தன் கைகளைப் பிடித்து உயர் தரத்தில் வெற்றி நிலை அறிவிக்க அழைத்து போனார்கள். உடனே மாணவர்களில் ஒரு மாணவன் இவர் எறிந்த கல் எங்கே என்று கேட்டான். கந்தன் ஓடிப் போய் எறிந்த வேகத்தில் பதிந்த கல்லை தடவி எடுத்து வந்து காட்டினான். இதன் மூலம் சகல மாணவர்களும் கந்தனைப் பாராட்டினார்கள். அன்றைய வகுப்பும் வெற்றிகரமாக முடிந்தது. அவரவர்கள் தம் வீடுகளுக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

கந்தனும் புறப்பட்டுச் சென்றுகொண்டிருக்கும் நிலையில் திருமண வீடு ஒன்றிற்காக போவதற்கு ஒரு பெண் ஒருவர் நல்ல உடுப்பு நடைபோடு தாலிக்கொடியும் அணிந்தவாறே பளபள வென மினுங்க நடந்து வந்தார். திடீரென ஒரு மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் முகத்தை தலைக்கவசத்தால் மறைத்தவாறே வந்தவர்கள் ஒருதடவை மிகவும் மெல்ல மெல்ல அவதானித்து போவதை கந்தன் பார்த்தான். பெண் தன்பாட்டில் எதையும் பொருட்படுத்தாமல் நடந்து சென்றாள். போன மோட்டார் சைக்கிள் கந்தனுக்கு மிக நெருக்கமாக வரும் வகையில் திரும்பி வந்துகொண்டிருந்தது.

எங்கும் கைக்கு ஒரு அளவான கல் இருக்குமோ என்று சுற்றும் முற்றும் கடைக்கண்ணால் பார்த்தான். ஒன்று தென்பட்டது. வந்த மோட்டார் சைக்கிளும் இவன் அருகால் பட்டும்படாமல் போனது. இன்னும் குறிப்பிட்ட தூரம் மெல்ல மெல்ல செல்வதை அவதானித்த கந்தன் தன் ஆயுதத்தை டக் என்று கைக்குள் எடுத்து நிதானமாக நடந்தான்.

கணப்பொழுதில் போன அந்த மோட்டார் சைக்கிள் திடீரென திரும்பிக் கொண்டு வேகமாக வருவதை கடைக்கண்ணால் கண்டான் கந்தன்.

வந்த மோட்டார் சைக்கிள் பெண்ணை நெருங்கிச் சென்றது. பின்னுக்கு இருந்த ஒருவர் மோட்டார் சைக்கிளில் இருந்தவாறே பெண்ணின் கழுத்தில் இருந்த தாலிக் கொடியைப் பிடித்து உருவிக் கொண்டு போனார். கணப்பொழுதில் கந்தனின் கல் அவனுடைய கையை குறிவைத்தது. கையில் இருந்த கல் தாலி அறுத்த கள்வனின் கைமணிக்கட்டில் இராமபிரானுடைய அம்பு போல இறங்கியது. உடனே கையில் இருந்த தாலியை கைவிட்டு அந்த மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் ஒரு சிறு பற்றைக்குள்ளால் தப்பி ஓடினார்கள். தாலியை எடுத்து அந்தப் பெண்ணிடம் கொடுத்து ஆறுதல் சொல்லி பாராட்டுப் பெற கந்தனுக்கு நேரம் இல்லை. உடனே பின் சென்று தேடிப்பார்த்த பொழுது தப்பி ஓடியவர்கள் ஆள்நடமாட்டம் இல்லாத அந்தக் காட்டில் கல் அகழ்ந்து தோண்டிய கிணறு மாதிரியான கிடங்கில் ஒழிந்து கொண்டதை பார்த்து வந்து பொலிஸில் அறிவித்து அவர்களைப் பிடித்த போதுதான் தெரிய வந்தது. அவர்கள் வேலை ஒன்றும் இல்லாது புகைப்பதற்கும், குடிப்பதற்கும் தேவையான பணத்தைப் பெற்றுக்கொள்ள இவ்வாறான குற்றச் செயல்களில் ஈடுபடுவது பொலிஸாரால் கண்டறியப்பட்டது.

ஆட்கள் நடமாட்டம் இல்லாத இடங்களில் நகை போட்டுக் கொண்டு போவதைத் தவிர்க்கவும் மற்றும் இவ்வாறான பிரதேசத்தில் இனந் தெரியாதவர்கள் நடமாடினால் உடனே பொலிஸ் நிலையத்துக்கு அறிவிக்கவும் இதன் பின்னர் அதிபர், ஆசிரியர், மாணவர்கள் ஊடாக பொது மக்களுக்கு என விழிப்புணர்வு பிரசாரம் கந்தன் தலைமையில் இடம் பெற்றது.

கந்தனையும் கந்தனின் ஆசிரியரையும் கல்லின் பிரயோசனத்தையும் அந்த மண்ணில் வாழும் மக்கள் அறிந்து கொள்ள இது ஒரு சந்தர்ப்பமாக அமைந்தது.

பா.இரமணாகரன்
அச்சுவேலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நூலாசிரியரைப் பற்றி....

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. பா. இரமணாகரன் சித்திரபாட ஆசிரியராவார். இவர் தனது துறையினைத் தூணாகக் கொண்டு பல மாணவருக்கு பயனுடைய நூல்களை ஆக்கியுள்ளார். இவற்றில் சித்திர வினாவிடை இரேகையில் சித்திரம். கலைஞனின் கவித்துளிகள் எனும் நூல்கள் குறிப்பிடக் கூடியன. இன்று புதிய ஆக்க கர்த்தாக்கள் குறைந்துள்ள நிலையில் இவ்வுலகிற்கு இவரின் வருகை வரவேற்கத்தக்கது. கல் என்ற சிறுவர் சிறுகதை ஊடாக விழுமியக் கருத்துக்களை சிறுவர்களின் மனதில் விதைக்க முனைந்துள்ளார். வாசிப்புப் பழக்கம் அருகி வரும் இன்றைய நாளில் இவ்வாறான முயற்சி பாராட்டுக்குரியதாகும். இவர் எனது புத்திமான் பலவான் என்ற சிறுவர் கதைக்கும் கருத்து ஓவியம் வரைந்து தந்துதவியமை மூலம் எனது படைப்பிலக்கியத்துக்கு துணையாக மிளிர்ந்துள்ளார். சமூக நலன் கருதிய இவரின் செயற்பாடு இன்றைய காலத்தின் தேவையாகும். இவரின் இந்த முயற்சியை தமிழ் கூறும் நல்லுலகு வரவேற்கும் என்று நம்புகின்றேன். மேலும் எல்லாம்வல்ல பரம்பொருளிலும் எம் குருநாதரின் ஆசிகளும் அவர்களுக்கு கிடைக்க வேண்டுவதோடு அவரின் இம் முயற்சிகள் தொடரவேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

**தி. தவரத்தினம்** (BA, PGDE, Dip.in Fsc)
அதிபர். SLPS-3
யா/ அராலி முருகமூர்த்தி வித்தியாலயம்

ISBN978-955-43539-3-0
9 789554 353930

PRINT@ANDRA, JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org